ஆனந்த வாசகம்
முதல் புத்தகம்

# ஆனந்த வாசகம்

ANANTA VACAKAM

## முதல் புத்தகம்

Book I

By
SAMBASIVA SARMA (R
&
VARADARAJA AYYAN

[Approved for class use: Vide page 22,
Consolidated List dated 10th May 1954]

CONNEMARA PUBLIC LIBRARY
24 JAN 1956
MADRAS

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
பவழக்காரத் தெரு :: சென்னை
1954 [அணா 5.

| | | |
|---|---|---|
| *First Issued:* | *Nov.* | *1939* |
| *Reprinted:* | *May* | *1940* |
| | *August* | *1941* |
| | *March* | *1947* |
| *Revised Edition:* | *Dec.* | *1950* |
| *Reprinted:* | *June* | *1951* |
| | *May* | *1952* |
| | *June* | *1954* |

ILLUSTRATED BY
A. K. SEKAR

The Progressive Printers, Madras 1.

CONNE[MARA]
24 JAN 1956
MADRAS

# முகவுரை

மனத்திலிருந்து வெளிப்படும் கருத்துக்களை வெளியிடக் ருவியாக இருப்பது பாஷை. வாழ்க்கைக்கு ஆதாரமாய் ருப்பதால், அதைத் தாய்க்கு நிகராக யாவரும் போற்றி ருகின்றனர். ஆதலின், தாய்மொழியில் திறமான ஞானம் பறுவது எவர்க்கும் இன்றியமையாதது ஆகும்.

இப்பொழுது சென்னைத் துரைத்தனத்தார் வெளியிட் ள்ள புதிய திட்டத்தில் தாய் மொழியைக் கற்பிக்கும் முறை கத் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளது. இம்முறை மாண ர்க்கு மொழியில் தெளிவான பரந்த ஞானமும், இலக்கணத் ல் தேர்ச்சியும் தரத்தக்கது என்பது யாவரும் ஒப்ப முடிந் த. இம்முறையை முற்றுந் தழுவியே 'ஆனந்த வாசகம்' ன்னும் இப்பாட புத்தகங்கள் வெளி வருகின்றன.

திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணவர்கள் பழக்கத் லேயே அறிந்துகொள்ளும்படி, புதுச்சொற்கள் ஒவ்வொரு ாடத்திலும் சேர்த்து வழங்கப்பெற்றுள்ளன. அவற்றுள், வசியமானவற்றுக்குப் பொருள் விளக்கமும் ஆங்காங்கே ரப்பெற்றுள்ளது. பாடத்தில் கூறப்படும் விஷயம் மாணவர் னத்தில் நன்கு பதிவதற்கு ஏற்றவாறு கேள்விகளும், பயிற்சி ளும் பாடங்களின் பின்னர்ச் சேர்க்கப்பெற்றுள்ளன. மாண வர்க்குச் சிறிது சிறிதாக இலக்கண அறிவை ஊட்ட விரும்பி, உதாரணத்தைக்கொண்டு விதிகளை விளக்கும் முறையில் இலக்கணம் கற்பிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகங்களில் காணப் படும் பல வகையான பயிற்சிகள் மாணவர்க்கு மொழியில் அழுத்தமான அறிவை ஊட்டும் என்று நம்புகின்றோம்.


இவ்வாசகவரிசையின் முதற் புத்தகத்து அமைப்பைப்பற் இங்குச் சிறிது கூறுதல் பொருந்தும்: குழந்தைகளுக்கு தெரிந்த பொருள்களின் உருவப் படங்களை அமைத்து, அவ றின்கீழ்ப் பெயரை எழுதி, அவைகளைப் பார்த்துப் பார்த் எழுதிப் பயிற்சி பெறும்படி செய்துள்ளோம். குழந்தைகளு குக் காட்சியிலும், கைப்பழக்கத்திலும், கேள்வியிலும், எழு துக்களின் சேர்க்கை புலப்படும்படி செய்துள்ளோ முதலிற் சிறிய சொற்களும், பின்னர்த் தொடர் மொழிகளு சிறு வாக்கியங்களுமாகத் தந்து அவர்கள் அறிவை வளர்க் முயன்றுள்ளோம்.

மக்களிடையே வழங்கும் நாட்டுப் பாட்டுக்களும், தேசி கவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய பாடல்களும், நீதி பாக்களும் அந்தந்த வகுப்பிற்கு ஏற்றவாறு சேர்த்திருக்கி றோம். குழந்தைகள் பாடிக் குதூகலம் அடையத் தக்க வேடி கைப் பாக்களும் சேர்க்கப் பெற்றுள்ளன.

இப்புத்தகங்களை இயற்றும் பணியில் உபாத்திமை தொழிலில் மிக்க அனுபவமுள்ள ஆசிரியர்களை உதவியாக கொண்டு, இயன்ற வரை நன்கு அமைக்க முயன்றுள்ளோம் அறிஞர் ஏற்ற திருத்தங்களை அன்புடன் தெரிவித்தால், இ புத்தகங்களை இன்னும் சீர்பெறச் செய்தல் கூடும். இவை பெறும் ஆதரவே, எம்மை இத்துறையில் மேன்மேலும் ஊக்க தக்க கருவியாகும்.

ஆசிரியர்க

2 JAN 1958



பெயர் சொல்லு.



அகர வரிசை

பாட்டு

அடுப்பும் ஆமையும் அ ஆ வாம்;
இலையும் ஈயும் இ ஈ யாம்;
உரலும் ஊதலும் உ ஊ வாம்;
எறும்பும் ஏற்றமும் எ ஏ யாம்;
ஒட்டகம் ஓணான் ஒ ஓ வாம்;
ஐயரும் ஔவையும் ஐ ஔ வாம்.

அ ஆ இ ஈ உ ஊ எ
ஏ ஐ ஒ ஓ ஔ இவைகள்
உயிர்எழுத் தென்பர் உலகோரே;
உண்மை இவைதாம் பன்னிரண்டே.





அ

அ



ப


பப்



ம

மம்

அப்-பம் பம்-மம்



அ ஆ

ஆ



ட ட்

ட



ர ர்


ர

ஆ-ரம் ஆட்-டம்
பட்-டம் மட்-டம்
பம்-பரம்




# இ

இ



# ய ய்

ய




# வ வ்

வ

| | | |
|---|---|---|
| இடம் | பயம் | வட்-டம் |
| படம் | வயம் | மட்-டம் |
| மடம் | வடம் | பட்-டம் |

பட்-டயம்



ஈ

இ ஈ



ழ

ழ ழ்



ல

ல ல்

| | | |
|---|---|---|
| ஈ - யம் | ஆ - யம் | இர - தம் |
| ஈ - ரம் | ஆ - ழம் | இட - பம் |
| ஈ - ழம் | பழம் | ஈட் - டம் |

அம் - மரம்

ஆ - லம் - பழம்




உ

உ



ச

ச ச்



க

க க்

உடல் சட் - டம் வட் - டம்

மடல் பக் - கம் கப் - பல்

கடல் அச் - சம் கட் - டம்

அக்-கம் பக்-கம்

ஈச்ச மரம்




உ ஊ

ஊ



த த்

த



ள ள்

ம

ஊ - தல்   பள் - ளம்   தச் - சர்
ஊ - சல்   உள் - ளம்   பத் - தர்
ஊ - கம்   கள் - ளர்   ஊக் - கம்

ஊ - சல் ஆட் - டம்
கள் - ளர் பயம்



# எ

எ

எள்

எச் - சம்

எவர்

எவள்

# ஏ



ஏ

ஏ - லம்

ஏ - தம்

ஏக் - கம்

ஏப் - பம்

எப் - பக் - கம்

இவள் ஏக் - கம்



# ஒ

ஒ

ஒட்-டகம்  ஒட்-டர்



# ஓ

ஓ

ஓ-மம்  ஓ-டம்

கடல் ஓ-ரம்

கப்-பல் ஓட்-டம்

# ஐ




ஐ-வர்
ஐ-யர்
ஐ-யம்

ஐ - வர் எவர்?
ஐ - யர் அவர்.



# ஔ

ஔ - டதம்



# ந ந்

நகம் நடம்

நலம் நயம்

பந்-தய ஓட்-டம்

ந



# ன ன்

மனம் மன்-னன்

தனம் சன்-னல்

மன்-னன் மகன்

ன



# ண ண்

பணம் அண்-ணன்

மணம் கண்-ணன்

கல் மண்-டபம்

ண



# ங ங்

சங் - கம்


பங் - கம்

மங் - கல்

ங

அங்-க பங்-கம்
எங்-கள் நலம்

# ஞ ஞ்




மஞ் - சள்

தஞ் - சம்

பஞ் - சம்

ஞ

நல்-ல மஞ்-சள்
கஞ்-ச மலர்



# ற ற்

எற்-றம்

ஆற்-றல்


வற்-றல்

கற்-றல்

மர எற்-றம்

கற்-றல் நலம்

ஃ



அஃ-கம்

கற்-றவர் அவர்.

மற்-றவர் பலர்.

## உயிர் எழுத்து—12

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

## ஆய்த எழுத்து—1

ஃ

## மெய் எழுத்து—18

க் ங் ச் ஞ் ட் ண் த்

ந் ப் ம் ய் ர் ல் வ்

ழ் ள் ற் ன்

## அகரம் ஏறிய உயிர்மெய்—18

க ங ச ஞ ட ண த

ந ப ம ய ர ல வ

ழ ள ற ன

## இரண்டாம் பாகம்



# ஆ

காகம்

க்+ஆ=கா

| | | |
|---|---|---|
| பாய் | காய் | நாதா |
| வாய் | சாய் | மாமா |
| மான் | தாய் | பாப்பா |

நாய் வால்.

காய் தா.

மாமா, வா.



நாய்

ந்+ஆ=நா

# ஆ



அண் - ணா

கண் - ணா

ஓ - ணான்

வண்ணான்

ண் + ஆ = ணா

அண் - ணா வா.

கண் - ணா பார்.



இறால்

கறார்

சிறான்

இறால்

ற் + ஆ = றா

உற் - றார் இவர்.

கற் - றார் எவர்.



மன் - னா

இனாம்

கனா

கன்னான்

ன் + ஆ = னா

கனாக் காண்.

இனாம் தா.

## பயிற்சி—1 (அ—ஆ)

| | | |
|---|---|---|
| க - கா | த - தா | ல - லா |
| ங - ஙா | ந - நா | வ - வா |
| ச - சா | ப - பா | ழ - ழா |
| ஞ - ஞா | ம - மா | ள - ளா |
| ட - டா | ய - யா | ற - றா |
| ண - ணா | ர - ரா | ன - னா |

| | |
|---|---|
| கல் - கால் | பல் - பால் |
| சரம் - சாரம் | மடம் - மாடம் |
| பலம் - பாலம் | வனம் - வானம் |
| நகம் - நாகம் | மனம் - மானம் |
| தலம் - தாலம் | தனம் - தானம் |
| மதம் - மாதம் | தரம் - தாரம் |

| | |
|---|---|
| கல் தளம் | கால் பாகம் |
| நல்ல மடம் | நாய் வால் |
| மலர் வனம் | பகல் வானம் |
| அன்ன தானம் | பழம் பாடம் |

# இ

கனி
தடி
நரி
படி
மணி
வழி
எலி
பசி



சாவி
மயில்
மதிள்
எழில்
நிழல்
சிதல்
விரல்
மகிழ்

விசிறி

வ்+இ=வி ச்+இ=சி ற்+இ=றி

மணி அடி. எலி பிடி.

கனி பறி. பசி தணி.

நிழல் வழி நிதி பதி

# ஈ

கீரி

சீனி

தீனி

நீதி

பீலி

மீதி

வீதி

லீலா



இளநீர்

ந்+ஈ=நீ

கீர்த்தி

சீரகம்

தீரம்

பீங்கான்

மீனம்

வீக்கம்

நீளம்

பன்னீர்

கலீர் கலீர் கால் வீக்கம்

மாட வீதி ஊர் சமீபம்

அரச நீதி நல்ல கீர்த்தி

## பயிற்சி — 2 (இ—ஈ)

| | | |
|---|---|---|
| கி - கீ | தி - தீ | லி - லீ |
| ஙி - ஙீ | நி - நீ | வி - வீ |
| சி - சீ | பி - பீ | ழி - ழீ |
| ஞி - ஞீ | மி - மீ | ளி - ளீ |
| டி - டீ | யி - யீ | றி - றீ |
| ணி - ணீ | ரி - ரீ | னி - னீ |

| | |
|---|---|
| கிரி - கீரி | மின் - மீன் |
| சிவன் - சீவன் | மிதி - மீதி |
| திரம் - தீரம் | மிதம் - மீதம் |
| நிலம் - நீலம் | விண் - வீண் |


| | |
|---|---|
| வீதி வலம் | நீல நிறம் |
| நீதி மன்றம் | தம்பீ, வா |
| விண் மீன் | கடல் மீன் |
| பணம் வீண் | நீதி சாரம் |

# உ



குணம் குலம்
முகம் அழகு

குடம்
க்+உ=கு



சிப்பு பஞ்சு
கதவு நிலவு

நிலவு நாள்
எழு கிணறு

பாம்பு
ப்+உ=பு



எருது ஐந்து
எழுது ஒன்று

கடல் காற்று
உயிர் எழுத்து

பந்து
த்+உ=து



கூடு

க் + ஊ = கூ

கூடம்

கூளம்

கூனன்

வீடு கூட்டு.

கூட்டம் கூடு.

கூனன் வீடு.



சூரியன்

ச் + ஊ = சூ

சூரன்

சூலம்

சூடம்

சூரிய கிரணம்.

சூடம் ஏற்று.

ஈசன் சூலம்.



மூடன்

மூலம்

மூச்சு

கிளி மூக்கு — மூக்கு

மூன்று வீடு — ம் + ஊ = மூ

நதி மூலம்





பூதம் — குண்டூசி எடு.

பூசம் — உள்ளூர் மாடு.

பூட்டு — பழூர்ப் பக்கம்.



தூரம்

தூபம்

தூங்கு

ஊசி நூல்

காத தூரம் — தூண்

தும்பு தூசி — த் + ஊ = தூ


## பயிற்சி—3 (உ—ஊ)

| | | |
|---|---|---|
| கு - கூ | து - தூ | லு - லூ |
| ஙு - ஙூ | நு - நூ | வு - வூ |
| சு - சூ | பு - பூ | ழு - ழூ |
| ஞு - ஞூ | மு - மூ | ளு - ளூ |
| டு - டூ | யு - யூ | று - றூ |
| ணு - ணூ | ரு - ரூ | னு - னூ |

| | |
|---|---|
| குடம் கூடம் | குற்றம் கூற்றம் |
| குனி கூனி | முடி மூடி |
| சுடு சூடு | துக்கம் தூக்கம் |
| துண்டு தூண்டு | குண்டு கூண்டு |

| | |
|---|---|
| புண்ணிய பூமி. | வீடு கூட்டு. |
| குன்னூர் பார். | சூது வாது. |
| கற்றான் வலிது. | தூண்டில் முள். |
| ஊருடன் கூடு. | இது வல்லூறு. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று 1 | மூன்று 3 | ஐந்து 5 | ஏழு 7 | ஒன்பது 9 |
| இரண்டு 2 | நான்கு 4 | ஆறு 6 | எட்டு 8 | பத்து 10 |




பெட்டி

ப்+எ=பெ

# எ

கெட்டி நெற்றி
செக்கு பெண்
செவிடு மெருகு
தெங்கு வெள்ளி

செக்கு மாடு.
பெண் கல்வி.
மெல்ல நட.



சேவல்

ச்+ஏ=சே

# ஏ

கேள்வி பேதம்
சேதம் மேகம்
தேசம் வேகம்
நேசன் வேடன்

தேங்காய் வாங்கு.
மேக நிறம்.

## பயிற்சி — 4 (எ—ஏ)

| | | |
|---|---|---|
| கெ - கே | தெ - தே | லெ - லே |
| ஙெ - ஙே | நெ - நே | வெ - வே |
| செ - சே | பெ - பே | ழெ - ழே |
| ஞெ - ஞே | மெ - மே | ளெ - ளே |
| டெ - டே | யெ - யே | றெ - றே |
| ணெ - ணே | ரெ - ரே | னெ - னே |

| | |
|---|---|
| கெடு - கேடு | பெறு - பேறு |
| செவி - சேவி | வெறு - வேறு |
| தெற்று - தேற்று | மெய் - மேய் |
| நெற்று - நேற்று | வெல் - வேல் |

| | |
|---|---|
| சேவல் கூவும். | வெட்டி வேர் |
| வேறு பேசு. | சிநேகம் செய். |
| பேறு பெறு. | பெரியார் இவரே. |
| வேடன் அம்பு | மூவர் தேவர். |

# ஐ



குடை

ட்+ஐ=டை

காக்கை பாதை

பச்சை வாழை

குதிரை பாவை

புடைவை பாறை

காலை மணை

மாலை மனை

பாளை களை

யானை பனை



பூனை

ன்+ஐ=னை

காலை வேளை

வெண் குடை

மண் பொம்மை

மாலை வேளை

தென்னை மரம்

வாழை இலை

பெண் யானை

தையற்காரன்

## பயிற்சி—5 (ஐ)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கை | ஞை | தை | மை | லை | ளை |
| ஙை | டை | நை | யை | வை | றை |
| சை | ணை | பை | ரை | ழை | னை |

| | | |
|---|---|---|
| தோசை | நடை | வெள்ளை |
| வடை | படை | தில்லை |
| கடை | வளை | சள்ளை |
| கலை | மடை | அன்னை |
| சுமை | பறை | புன்னை |
| அடை | பசை | கலவை |

| | |
|---|---|
| சைவ மதம் | திரை விடு. |
| தையல் இவள். | வாயை மூடு. |
| பையன் எவன்? | தலை வலி |
| கடல் அலை | காளை மாடு |
| குமரி முனை | முறை இடு. |
| ஈசன் துணை. | வடை தோசை |



ொ

கொம்பு தொப்பி
சொப்பு நொண்டி
பொறுமை

கொக்கு
க்+ஒ=கொ

பொறுமை கொள்.
புத்தி சொல்லு.
வெண் பொங்கல்

ோ



தோழன் கோபம்
நோன்பு யோகம்

கோபுரம்
க்+ஓ=கோ

மயில் தோகை

கோலம் போடு. ஆணோ பெண்ணோ

## பயிற்சி—6 (ஒ—ஓ)


| | | |
|---|---|---|
| கொ - கோ | தொ - தோ | லொ - லோ |
| ஙொ - ஙோ | நொ - நோ | வொ - வோ |
| சொ - சோ | பொ - போ | ழொ - ழோ |
| ஞொ - ஞோ | மொ - மோ | ளொ - ளோ |
| டொ - டோ | யொ - யோ | றொ - றோ |
| ணொ - ணோ | ரொ - ரோ | னொ - னோ |

| | |
|---|---|
| கொடு - கோடு | பொய் - போய் |
| சொப்பு - சோப்பு | கொடை - கோடை |
| தொடு - தோடு | நொய் - நோய் |

| | |
|---|---|
| நெய் - நொய் | கேள் - கோள் |
| கெடு - கொடு | செல் - சொல் |
| பெய் - பொய் | கேலி - கோலி |

| | |
|---|---|
| கேள்வி கேள். | கேலி செய். |
| கோள் விடு. | மெய் பேசு. |
| கோடு இழு. | நல்ல நெய். |
| நோன்பு நாள் | தலை நோய். |

# ஔ



ஔ - வையார்
கௌ - தமர்
மௌ - னம்

வௌவால்
வ்+ஔ=வௌ

யௌ-வன பரு-வம்
மௌ-ன விர-தம்
கௌ-தம புத்-தர்
பௌர்-ணமி திதி



சௌக் - கியம்
யௌ - வனம்
கௌ - சலை

கௌ-தா-ரி
க்+ஔ=கௌ

## பயிற்சி—7 (ஔ)


| | | |
|---|---|---|
| கௌ | தௌ | லௌ |
| ஙௌ | நௌ | வௌ |
| சௌ | பௌ | ழௌ |
| ஞௌ | மௌ | ளௌ |
| டௌ | யௌ | றௌ |
| ணௌ | ரௌ | னௌ |

இவர் மௌனி.
தேக சௌக்கியம்
தௌமிய முனிவர்
ஔவை வாக்கு
கௌசிக முனிவர்

| | | |
|---|---|---|
| அலை - அழை | மனம் - மணம் | அரம் - அறம் |
| மலை - மழை | கனம் - கணம் | மரம் - மறம் |
| வலை - வளை | கல் - கள் | திரம் - திறம் |
| தலை - தழை | புல் - புள் | உரை - உறை |
| குரல் - குறள் | கிளை - கிணை | அவல் - அவள் |

## வடமொழி எழுத்துக்கள்





# ஜன்னல் ஸர்ப்பம்

ஜ்+அ=ஜ

ஸ்+அ=ஸ

ஜயம்
ஜாதி
ஜீவன்
ஜோதி
மேஜை

ஸிம்மம்
ஸுலபம்
ஸேவகன்
ஸ்நானம்
புஸ்தகம்


புஷ்ப வாஸனை
கண்ணாடி ஜன்னல்
ஜய பேரிகை
தஞ்சை ஜில்லா
ரோஜா புஷ்பம்



# ரிஷபம்

ஷ் + அ = ஷ

பாஷை
உஷ்ணம்
இஷ்டம்
விஷம்
நஷ்டம்



# ஹாரம்

ஹ் + ஆ = ஹா

ஹநுமான்
ஹிம்ஸை
ஹீனம்
ஹேது
ஹோமம்

பரம ஹம்ஸர்
ஷஷ்டி பூஜை
கஷ்ட நஷ்டம்
ஜீவ ஹிம்ஸை
ஸுந்தர புருஷன்





பக்ஷி

க்ஷ + இ = க்ஷி

ஸ்ரீ

பக்ஷம்
க்ஷீரம்
க்ஷேமம்
பரீக்ஷை
லக்ஷ்மி

ஸ்ரீரங்கம்
ஸ்ரீமான்
ஸ்ரீமதி
ஸ்ரீராமர்
ஸ்ரீ ராமஜயம்

க்ஷேம காலம்
க்ஷீர ஸாகரம்
கக்ஷி பேதம்
பக்ஷ பாதம்
அக்ஷய பாத்திரம்

# தமிழ் எழுத்துக்கள்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

## வடமொழி எழுத்துக்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ |

## தமிழ் எழுத்துக்கள்

| ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| தே | தை | தொ | தோ | தௌ | த் |
| நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| பே | பை | பொ | போ | பௌ | ப் |
| மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| னே | னை | னொ | னோ | னௌ | ன் |

## வடமொழி எழுத்துக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ | ஜ் |
| ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ | ஸ் |
| ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ | ஷ் |
| ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ் |
| க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ் |



# 1. நல்ல பழக்கம்

1. காலையில் எழுந்திரு.
2. கடவுளை வணங்கு.
3. தினமும் நீராடு.
4. நல்ல ஆடை உடுத்து.
5. சுத்தமாய் இரு.
6. சோம்பலை நீக்கு.
7. பாடம் படி.
8. உண்மையே பேசு.
9. தாய் தந்தையரை வணங்கு.
10. கடவுள் காப்பார்.








## 2. குடும்ப வேலைகள்

தங்கை கோலம் போடுகிறாள்.
தாய் சமையல் செய்கிறாள்.
அண்ணன் கடைக்குப் போகிறான்.
குழந்தை கூடத்தில் விளையாடுகிறது.
அக்காள் ஆர்மோனியம் வாசிக்கிறாள்
தம்பி குழந்தையைக் கொஞ்சுகிறான்.
பாட்டி காய்கறி நறுக்குகிறாள்.
வேலைக்காரி பாத்திரம் தேய்க்கிறாள்.
தந்தை ஆபீஸ் போகிறார்.
நான் பள்ளிக்கூடம் போகிறேன்.






## 3. மிருகங்கள்



பசு, பால் தரும்.



பூனை, எலி பிடிக்கும்.



யானை, பெரிய மிருகம்.



குதிரை, வேகமாய் ஓடும்.




நாய், வீட்டைக் காக்கும்.



ஆடு, தழை தின்னும்.

# 4. பறவைகள்

காகம், காலையில் கரையும்.






கிளி, கொஞ்சிப் பேசும்.



மயில், அழகாய் ஆடும்.



வாத்து, நீரில் நீந்தும்.


கோழி கூவ எழுந்திரு.





குருவி, கூடு கட்டும்.






## 5. வ

### வாகனங்கள்—I




மாட்டு வண்டி
குதிரை வண்டி
ரிக்ஷா வண்டி
சைக்கிள் வண்டி
மோட்டார் வண்டி
இரயில் வண்டி
நிலத்தில் எவை போகும்?











ன ங் க ள்

## வாகனங்கள்—II



பரிசல், ஆற்றில் போகும்.

தெப்பம், குளத்தில் மிதக்கும்.

ஓடம், ஆற்றில் ஓடும்.


கப்பல், கடலில் செல்லும்.

ஆகாய விமானம் பறக்கும்.




நீரில் எவை போகும்?

ஆகாயத்தில் பறப்பது எது?






ARA PUBLIC LIBRARY



## 6. நிலாப்பாட்டு


நிலா! நிலா! வாவா.
நில்லாமல் ஓடிவா.
மலைமேலே ஏறிவா.
மல்லிகைப்பூக் கொண்டுவா.
நடுவீட்டில் வையே.
நல்லதுதி செய்யே.
வெள்ளிக் கிண்ணத்தில்
பாலும் சோறும்
அள்ளி அள்ளி ஊட்டு;
குழந்தைக்குச் சிரிப்புக்
காட்டு.





# 7. பள்ளிக்கூடம்


இது எங்கள் பள்ளிக்கூடம்.
முதல் வகுப்பு இதுதான்.
எங்கள் உபாத்தியாயர் நல்லவர்.
கந்தன் என்னுடன் படிக்கிறான்.
காலையில் மணி அடிப்பார்கள்.
நாங்கள் வகுப்பிற்குப் போவோம்.
மாலையில் பள்ளிக்கூடம் விடுவார்கள்.
நாங்கள் மாலையில் விளையாடுவோம்.
நாங்கள் குதித்து ஓடுவோம்.





# 8. விளையாட்டு

சிறுவர் தெருவில் காற்றாடி விடுகின்றனர்.
தம்பி நன்றாய்க் கோலி ஆடுவான்.
தங்கை தட்டாமாலை சுற்றுகிறாள்.
நான் பந்து அடிக்கிறேன்.
சிறுமிகள் கோலாட்டம் போடுகிறார்கள்.
அண்ணன் நொண்டி அடிக்கிறான்.
சுந்தரம் பம்பரம் ஆடுகிறான்.
பெண்கள் அம்மானை ஆடுகிறார்கள்.
கண்கட்டி விளையாட்டு இன்பம் தரும்.
விளையாட்டு உடம்பிற்குப் பலம் தரும்.





## 9. தொழில்கள்

சேணியன் ஆடையை நெய்கிறான்

தச்சன் கதவைச் செய்கிறான்.

கொல்லன் இரும்பை அடிக்கிறான்.

தட்டான் நகையைச் செய்கிறான்.

வண்ணான் துணியை வெளுக்கிறான்.

உழவன் வயலை உழுகிறான்.

குயவன் பாண்டத்தை வனைகிறான்.

செம்படவன் மீனைப் பிடிக்கிறான்.

சுந்தரி ராட்டினத்தைச் சுழற்றுகிறாள்.

ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கிறார்.




## 10. பண்டிகை



தை மாதம் பொங்கல் பண்டிகை.
அன்று நாங்கள் பொங்கல்
உண்போம்.



ஐப்பசி மாதம் தீபாவளி வரும்.
ஆடைகள் அணிந்து வெடி
வெடிப்போம்.




கார்த்திகை மாதம் கார்த்திகைத்
தீபம்.
விளக்கு ஏற்றிப்பொரி தின்போம்.



டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ்
பண்டிகை.
சென்னையில் கிறிஸ்மஸ் வெகு
சிறப்பு.



முகமதியர் பண்டிகை மொகரம்.
நகரம் எங்கும் விநோதம் அதிகம்



ஊர்களில் எங்கும் தேர் விழா
உண்டு.
திருவாரூரில், தேர் அழகாம்.

## 11. சுக வழி

சுத்தமான காற்று, சுகம் தரும்.

நல்ல வீட்டில் குடி இரு.

சுத்த ஜலம், என்றும் நலம்.

எச்சில் பண்ணுதே; எச்சில் துப்பாதே.

கூழ் ஆனாலும் குளித்துக் குடி.

கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.

ஓட்டமும் ஆட்டமும் உடம்பிற்கு நலம்

வேளை தப்பி உண்பது கெடுதல்.


காலைக் கழுவி உள்ளே செல்.

படுக்கும் முன்னே பரமனை நினை.

ஒத்த இடத்தில் நித்திரை செய்

கடவுள் தியானம் கஷ்டம் நீக்கும்

## 12. படம் பார்த்துக் கதை சொல்லு.



பயிற்சி :—1. கிழவி என்ன செய்கிறாள்? 2. அங்கு வந்தது எது? 3. காகம் என்ன செய்தது? 4. காகம் எங்கு உட்கார்ந்திருக்கிறது? 5. நீ வேறு எதைப் பார்க்கிறாய்? 6. அது எப்படி இருக்கிறது? 7. மரத்தடியில் நிற்பது எது? 8. அது என்ன செய்தது? 9. காக்கை என்ன செய்தது? 10. அதனால் என்ன ஆயிற்று? 11. பின்பு நரி என்ன செய்தது? 12. இதனால் நீ அறிவது என்ன?

# ஆனந்த வாசகம்

ANANTA VACAKAM

## இரண்டாம் புத்தகம்

Book

CONNEMARA PUBLIC LIBRARY
24 JAN 1956
MADRAS

*Approved for class use: Vide Page 21 Part I and Page 78 Part II of Fort. St. George Gazette dated 19-5-54.*

பதிப்பாளர்:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு :: சென்னை 1

பதிப்புரிமை] 1954 [விலை அணா 6

*First Issued:* *November 1939,*
*Reprinted:* *July 1940, March 1941, May 1945, Nov. 1947 & March 1949.*
*Revised Edition:* *October 1950.*
*Reprinted:* *June 1951, June 1953 & June 1954.*

52563

260211

The Progressive Printers, Madras 1.

24 JAN 1956
MADRAS

# முகவுரை

மனதிலிருந்து வெளிப்படும் கருத்துக்களை வெளியிடக் கருவியாக இருப்பது பாஷை. வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பதால், அதைத் தாய்க்கு நிகராக யாவரும் போற்றி வருகின்றனர். ஆதலின், தாய்மொழியில் திறமான ஞானம் பெறுவது எவர்க்கும் இன்றியமையாதது ஆகும்.

இப்பொழுது சென்னைத் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில் தாய் மொழியைக் கற்பிக்கும் முறை மிகத் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளது. இம்முறை மாணவர்க்கு மொழியில் தெளிவான பரந்த ஞானமும், இலக்கணத்தில் தேர்ச்சியும் தரத்தக்கது என்பது யாவரும் ஒப்ப முடிந்ததே. இம்முறையை முற்றுந்தழுவியே 'ஆனந்த வாசகம்' என்னும் இப்பாட புத்தகங்கள் வெளி வருகின்றன.

பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணவர்கள் பழக்கத்தாலேயே அறிந்து கொள்ளும்படி, புதுச்சொற்கள் ஒவ்வொரு பாடத்திலும் சேர்த்து வழங்கப்பெற்றுள்ளன. அவற்றுள், அவசியமானவற்றுக்குப் பொருள் விளக்கம் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளது. பாடத்தில் கூறப்படும் விஷயம் மாணவர் மனத்தில் நன்கு பதிவதற்கு ஏற்றவாறு கேள்விகளும் பயிற்சிகளும் பாடங்களின் அடியில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்க்குச் சிறிது சிறிதாக இலக்கண அறிவை ஊட்ட விரும்பி, உதாரணத்தைக்கொண்டு விதிகளை விளக்கும் முறையில் இலக்கணம் கற்பிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகங்களிற் காணப்படும் பல வகையான பயிற்சிகள் மாணவர்களுக்கு மொழியில் அழுத்தமான அறிவை ஊட்டும் என்று நம்புகின்றோம்.

# பொருளடக்கம்



| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| A-B. | படம் பார்த்துப் பெயரைச் சொல்லு; எழுது: | | 1 |
| 1. | அண்ணனும் தங்கையும் | .... | 3 |
| 2. | சுவைகள் | .... | 4 |
| 3. | நிறங்கள் | .... | 5 |
| 4. | பள்ளிக்கூடம் | .... | 6 |
| 5. | பொருளின் தன்மை | .... | 7 |
| 6. | உறுப்புக் குறைந்தவர் | .... | 8 |
| 7. | அடுக்குத் தொடர்கள் | .... | 9 |
| 8. | வசிக்கும் இடம் | .... | 10 |
| 9. | குழந்தை குதிக்கும் பாட்டு | .... | 11 |
| 10. | மகாத்துமா காந்தி | .... | 12 |
| 11. | எண்கள் | .... | 13 |
| 12. | பக்கங்கள் | .... | 14 |
| 13. | திசைகள் | .... | 15 |
| 14. | இளமைப் பெயர் | .... | 16 |
| 15. | கீரை வகைகள் | .... | 18 |
| 16. | எதிரான செயல்கள் | .... | 19 |
| 17. | இடம் | .... | 20 |
| 18. | தொழிலாளிகள் | .... | 21 |
| 19. | பகையான பிராணிகள் | .... | 23 |
| 20. | உபயோகம் | .... | 24 |
| 21. | எண்ணிக்கை | .... | 25 |
| 22. | மிருகமும் பறவையும் | .... | 26 |
| 23. | கண்டு பிடி! | .... | 28 |

29 JAN 1958
MADRAS

| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 24. | பாப்பாப் பாட்டு .... | 29 |
| 25. | குரல் .... | 31 |
| 26. | பொன்மொழிகள் .... | 32 |
| 27. | செய்யப்படுதல் .... | 33 |
| 28. | சிங்கமும் சுண்டெலியும் .... | 34 |
| 29. | விடுகவி .... | 36 |
| 30. | ஆண்—பெண் .... | 37 |
| 31. | பேராசை .... | 38 |
| 32. | ஔவையார் .... | 40 |
| 33. | வானம் விழுந்த கதை .... | 42 |
| 34. | கவனித்து வாசி .... | 47 |
| 35. | எலிகள் கூட்டம் .... | 48 |
| 36. | விடுகவி .... | 51 |
| 37. | காகம் .... | 52 |
| 38. | தபால் .... | 54 |
| I. | ஆத்திசூடி .... | 58 |
| II. | உலகநீதி .... | 60 |

29 JAN 1956

A. படம் பார்த்துப் பெயரைச் சொல்லு; எழுது:






# 1. அண்ணனும் தங்கையும்

1. சுந்தரம் என்பவன் நல்ல பையன்.
2. சுந்தரி என்பவள் அவன் தங்கை.
3. அவர்கள் பள்ளிக்கூடம் போகிறார்கள்.
4. சுந்தரம் அழுகிறான்; சுந்தரி சிரிக்கிறாள்.
5. சுந்தரி கையில் என்ன இருக்கிறது?

பயிற்சி :

விடுபட்ட பதங்களை அமைத்துப் படி :

1. தங்கை பெயர் — .
2. சுந்தரம் அவள் — .
3. சுந்தரி கையில் — இருக்கிறது.

## 2. சுவைகள்

1. கற்கண்டு **இனிப்பாய்** இருக்கும்.
2. எலுமிச்சம் பழத்தின் சுவை **புளிப்பு**
3. மிளகாய் **காரம்** உடையது.
4. உப்பின் சுவை **உவர்ப்பு.**
5. மாவடு **துவர்ப்பாய்** இருக்கும்.
6. சுண்டைக்காய் **கசப்பாய்** இருக்கும்.
7. இனிப்பு, புளிப்பு, காரம், உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு என்னும் இவை ஆறும் **அறுசுவைகள்.**

பயிற்சி :

1. இனிப்பு உள்ள பொருள் மூன்று சொல்லு.
2. காரமாய் இருக்கும் பொருள் எது?
3. அறுசுவை என்பவை எவை?
4. உனக்கு எந்தச் சுவையில் பிரியம் அதிகம்?
5. நீ சுவையை எதனால் அறிகிறாய்?

## 3. நிறங்கள்

1. வெற்றிலையின் நிறம் **பச்சை.**
2. செவ்வந்திபூவின் நிறம் **மஞ்சள்.**
3. **சிவப்பு** அரளி ஒரு விதப் பூ.
4. காக்கை **கறுப்பு** நிறம் உடையது.
5. முல்லை மலரின் நிறம் **வெள்ளை.**
6. இவை ஐந்தும் **பஞ்ச வர்ணங்கள்.**
7. வேறு நிறங்களும் உண்டு.

### பயிற்சி:

1. பஞ்ச வர்ணங்கள் எவை?
2. ஊதா நிறம் உள்ளது எது?
3. எது பழுப்பு நிறமானது?
4. வானத்தின் நிறம் என்ன?
5. உனக்குத் தெரிந்த வர்ணங்கள் எவை?
6. நீ நிறத்தை எதனுல் அறிகிருய்?



# 4. பள்ளிக்கூடம்

1. இது ஒரு கிராமப் பள்ளிக்கூடம்.
2. காலைப் பத்து மணிக்கு மணி அடிக்கும்.
3. பிள்ளைகள் வாசிக்கத் தொடங்குவார்கள்.
4. பகல் ஒரு மணிக்குச் சாப்பிடப் போவார்கள்.
5. இரண்டு மணிக்கு மறுபடியும் கூடுவார்கள்.
6. மாலை நாலரை மணிக்கு மணி அடிக்கும்.
7. பிள்ளைகள் தங்கள் வீட்டுக்குச் செல்வார்கள்.
8. மாலை வேளையில் பிள்ளைகள் விளையாடுவார்கள்.
9. அவர்களுக்கு விளையாட்டில் விருப்பம் அதிகம்.

பயிற்சி:

1. உங்கள் பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புக்கள் உண்டு?
2. பள்ளிக்கூடம் எப்போது ஆரம்பமாகும்?
3. உன் வகுப்பில் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்?

## 5. பொருளின் தன்மை

1. தக்கை **மிதக்கும்.**
2. சர்க்கரை **கரையும்.**
3. தண்ணீர் **ஊறும்.**
4. கிழங்கு **வேகும்.**
5. ஊறுகாய் **ஊறும்.**
6. கனமானது **ஆழும்.**
7. நெருப்புச் **சுடும்.**
8. பழம் **அழுகும்.**
9. இலவங்காய் **வெடிக்கும்.**
10. பஞ்சு **பறக்கும்.**


பயிற்சி:

*தடித்த எழுத்தில் உள்ள வார்த்தைகளை அமைத்து ஒவ்வொரு சிறு வாக்கியம் சொல்லி எழுது.*

# 6. உறுப்புக் குறைந்தவர்



முடவன் குருடன் செவிடன் கூனன்



மூடன் ஊமை மூக்கறையன் பித்தன்

பயிற்சி:

படங்களின் பெயர்களைப் பொருத்தமான வரியில் அமை:—

1. கால் குறைந்தவன் — .
2. கண் தெரியாதவன் — .
3. காது கேளாதவன் — .
4. முதுகு வளைந்தவன் — .
5. புத்தி இல்லாதவன் — .
6. பேச முடியாதவன் — .
7. மூக்கு இல்லாதவன் — .
8. புத்தி கலங்கியவன் — .



# 7. அடுக்குத் தொடர்கள்

வாழைக்காய் சீப்புச்சீப்பாய் இருக்கும்.

கத்தரிக்காயைக் கூறுகூறாய் விற்பார்கள்.

திராட்சை குலைகுலையாய் இருக்கும்.

பலாப்பழம் சுளைசுளையாய் இருக்கும்.

புஸ்தகங்கள் அடுக்குஅடுக்காய் உள்ளன.

அத்தான் பாம்புபாம்பு என்று கத்தினான்.

பயிற்சி:

பின் வரும் அடுக்குத்தொடர்களைப் பொருத்தமான வாக்கியத்தில் அமைத்துச் சொல்லு :—

1. மந்தை மந்தையாய்    2. கொத்துக்கொத்தாய்
3. மூட்டை மூட்டையாய்    4. வரிசைவரிசையாய்

1. சிறுவர்கள்——நிற்கிறார்கள்.
2. பருப்பு——அடுக்கி இருக்கிறது.
3. மாடுகள்——போகின்றன.
4. கொத்தவரை——இருக்கும்.

# 8. வசிக்கும் இடம்



வளை நீர் மாடம் காடு மரம் கொட்டில்

பயிற்சி:

பின் வரும் வாக்கியங்களில் சரியான பதத்தை அமைத்து வாசி:—

1. —வளையில் வசிக்கிறது.
2. நீரில்—வசிக்கிறது.
3. —கொட்டிலில்—
4. புலி—வசிக்கிறது.
5. —மரத்தில்—.
6. புறா—வசிக்கிறது.



## 9. குழந்தை குதிக்கும் பாட்டு

சங்கு சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம்—அது
சிங்குச் சிங்கென ஆடுமாம்—அது
சிங்குச் சிங்கென ஆடுமாம்.

கொட்டுக் கொட்டச் சொல்லுமாம்—அது
கூத்துமாடப் பண்ணுமாம் (சங்கு)

உலகம் மூன்றும் அளக்குமாம்—அது
ஓங்கி வானம் பிளக்குமாம் (சங்கு)

கலகலென்று சிரிக்குமாம்—அது
காணக் காண இனிக்குமாம் (சங்கு)

மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார்



## 10. மகாத்துமா காந்தி

இவரே மகாத்துமா காந்தி என்பவர்.

இவர் முழுப்பெயர் என்ன தெரியுமா?

மோகனதாஸ் கரம் சந்து காந்தி என்பது.

இவர் பம்பாய் மாகாணத்தில் பிறந்தவர்.

போர்பந்தர் என்பது இவர் சொந்த ஊர்.

இவர் கல்வியில் மிகவும் வல்லவர்.

இவர் பொறுமைக்கு இருப்பிடம் ஆவர்.

இவர் நமது நன்மைக்காகப் பாடுபட்டவர்.

பயிற்சி :

1. மகாத்துமா காந்தியின் முழுப்பெயர் என்ன?
2. பொறுமை என்பது போன்ற இன்னொரு நற்குணம் என்ன?
3. நாம் வசிக்கும் மாகாணம் எது?

## 11. எண்கள்

தெய்வம் **ஒன்று.** 1

கண்கள் **இரண்டு.** 2

தொழில்கள் **மூன்று.** 3

படைகள் **நான்கு.** 4

உலோகங்கள் **ஐந்து.** 5

சுவைகள் **ஆறு.** 6

கிழமைகள் **ஏழு.** 7

திக்குகள் **எட்டு.** 8

கிரகங்கள் **ஒன்பது.** 9

விரல்கள் **பத்து.** 10


**தொழில்கள் :** உண்டாக்குதல், காப்பாற்றுதல், அழித்தல்

**படைகள் :** தேர்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாள் படை.

**உலோகங்கள் :** பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

**கிழமைகள் :** ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

**திக்குகள் :** கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு.




## 12. பக்கங்கள்

1. மேஜை கூடத்தின் நடுவில் இருக்கிறது.
2. விளக்கு மேஜையின் மேல் இருக்கிறது.
3. பூனைக்குட்டி மேஜையின் கீழ் விளையாடுகிறது.
4. மேஜையின் வலப்பக்கம் குடை இருக்கிறது.
5. மேஜையின் இடப்பக்கம் புஸ்தகம் இருக்கிறது.
6. மேஜையின் பின்பக்கம் தம்பி நிற்கிறான்.
7. மேஜையின் முன்பக்கம் அறைகள் உள்ளன.
8. மேஜையின் உள்பக்கம் பணம் இருக்கிறது.

பயிற்சி :

கோடுள்ள இடங்களில் தகுந்த வார்த்தையை அமை :—

1. எங்கள் வீட்டின்—தோட்டம் இருக்கிறது.
2. அம்மியின் — குழவி இருக்கிறது.
3. மெத்தையின் — பாய் இருக்கிறது.




# 13. திசைகள்

1. சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.
2. சூரியன் மறையும் திசை மேற்கு.
3. கிழக்கே பார்த்து நேராக நில்லு.
4. உனது வலக்கையைத் தூக்கு.
5. உனது வலக்கைப் பக்கம் தெற்கு.
6. உனது இடக்கையை உயர்த்து.
7. உனது இடக்கைப் பக்கம் வடக்கு.
8. நான்கு திசைகளை வரிசையாகச் சொல்லு.
9. திசைக்குத் திக்கு என்றும் பெயர் உண்டு.

பயிற்சி :

1. பள்ளிக்கூடம் உன் வீட்டிற்கு எப்பக்கம் இருக்கிறது?
2. உன் வீட்டிற்கு மேற்கே என்ன இருக்கிறது?
3. வடக்கே பார்த்து நில்; நான்கு திக்கும் சொல்.

# 14. இளமைப் பெயர்



கோழிக்குஞ்சு.



பன்றிக்குட்டி.



அணிற்பிள்ளை.



பசுக்கன்று.



மாங்காய்வடு.



வெள்ளரிப்பிஞ்சு.



மருக்கொழுந்து.



ஈச்சங்குருத்து.



மல்லிகை அரும்பு.



நல்ல குழந்தை.

பயிற்சி: கோடுள்ள இடங்களில் தகுந்
இளமைப் பெயரைச் சேர்த்துச் சொல்லு

1. பலாப் —. 2. கிரிப் —. 3. பூனைக் —. 4. புருக் —
5. காளைக் —. 6. வெற்றிலை —. 7. —மாங்காய். 8. முல்லை—



# 15. கீரை வகைகள்

சக்கரவர்த்திக்கீரை கீரைத்தண்டு

முளைக்கீரை அரைக்கீரை

மணித்தக்காளிக்கீரை பசலைக்கீரை

பருப்புக்கீரை வெந்தயக்கீரை

கீரைப் பாத்தி கீரைக் கொல்லை

கீரைக் குழம்பு கீரை மசியல்

கீரை உணவு உடம்புக்கு நல்லது.

கீரை உண்பவர் சீரை அடைவர்.

## 16. எதிரான செயல்கள்

| | |
|---|---|
| எழுந்து **நில்.** | கீழே **உட்காரு.** |
| கண்ணைத் **திற.** | கண்ணை **மூடு.** |
| விரலை **நீட்டு.** | விரலை **மடக்கு.** |
| பேனாவை **எடு.** | புத்தகத்தை **வை.** |
| விளக்கை **ஏற்று.** | விளக்கை **அணை.** |
| தலையை **நிமிர்த்து.** | தலையைக் **குனி.** |
| கையை **உயர்த்து.** | கையைத் **தாழ்த்து.** |
| முன்னே **வா.** | பின்னே **போ.** |
| உண்மை **பேசு.** | பொய் **பேசாதே.** |

குறிப்பு:—இங்குள்ள எதிரான செயல்களைத் தெரிவிக்கும் பதங்களைக் குழந்தைகள் தெரிந்துகொள்ளும்படி விளக்கிக் காட்டி, அவர்கள் இவற்றைச் சரிவர எழுதவும் சொல்லவும் செய்யவேண்டும்.

# 17. இடம்




மேலே




உள்ளே



முன்னே



கீழே



வெளியே



பின்னே

பயிற்சி:

படத்தின் கீழ் உள்ள பதங்களை ஏற்ற வாக்கியத்தில் சேர்த்து வாசி :—

1. பெட்டியின்—புத்தகம் இருக்கிறது.
2. கூண்டின்—கிளி இருக்கிறது.
3. வண்டியின்—மாடு இருக்கிறது.
4. மேஜையின்— நாய் இருக்கிறது.
5. வீட்டின்—வாசல் இருக்கிறது.
6. எனக்குப்— தங்கை இருக்கிருள்.

# 18. தொழிலாளிகள்

துணிகள் வெளுப்பவன்



நகைகள் செய்பவன்



மண்பாண்டம் செய்பவன்



மரவேலை செய்பவன்



பாத்திரம் செய்பவன்



கட்டடவேலை செய்பவன்



இவர்கள் தொழில் செய்கிறார்கள்.
தொழில் செய்பவன் தொழிலாளி.

பயிற்சி :

பின் வரும் தொழிலாளிகளின் பெயர்களைப் படி. அடியிலுள்ள வாக்கியங்களில் ஏற்ற இடத்தில் அவர்கள் பெயரைச் சேர்த்து வாசி :—

| | |
|---|---|
| நெய்வ்காரன் | சக்கிலியன் |
| கொற்றன் | சேணியன் |

1. ஆடை நெய்பவன்............
2. துணி தைப்பவன்............
3. வீடு கட்டுகிறவன்............
4. செருப்புத் தைப்பவன்............

# 19. பகையான பிராணிகள்

எலிக்குப் பகை



பூனைக்குப் பகை




பாம்புக்குப் பகை



ஆட்டுக்குப் பகை



யானைக்குப் பகை



பயிற்சி :—அடியிலுள்ள படம் பார்த்து வாக்கியம் எழுது :—



1. — — —
2. — — —



## 20. உபயோகம்

வினா: மேலேயுள்ள படங்களின் பெயரைச் சொல்லு.

பயிற்சி:

பின் வரும் ஆறு பதங்களும் மேலேயுள்ள பொருள்களின் உபயோகத்தைத் தெரிவிக்கின்றன. அந்தப் பதங்களை ஏற்ற வாக்கியத்தில் அமைத்துக் காட்டு:

| | | |
|---|---|---|
| எழுத | சீவ | சாப்பிட |
| படுக்க | உட்கார | விளையாட |

1. கட்டில் — உதவும்.
2. வாழை இலை — —.
3. கத்தி — —.
4. பந்து — —.
5. பேனா — —.
6. நாற்காலி — —.

## 21. எண்ணிக்கை

இது ஒரு புஸ்தகம்.

இவை என்னுடைய புஸ்தகங்கள்.

அது ஒரு மலர்.

அவை பல மலர்கள்.

எனது வீடு எது?

உன்னுடைய புத்தகங்கள் எவை?

இங்கே நாய் குரைக்கின்றது.

அங்கே நாய்கள் குரைக்கின்றன.

நேற்றுத் தம்பி வந்தான்.

இன்று உறவினர் வந்தனர்.

அவன் ஊருக்குப் போகிறான்.

அவர்கள் பள்ளிக்கூடம் போகிறார்கள்.

இது - இவை. புஸ்தகம் - புஸ்தகங்கள்.

அது - அவை. மலர் - மலர்கள்.

எது - எவை. நாய் - நாய்கள்.

வந்தான் - வந்தார்கள். அவன் - அவர்கள்.

குரைக்கின்றது - குரைக்கின்றன.

குறிப்பு:—ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்டவை—இவைகளைப் பிள்ளைகளுக்கு விளக்கிக் காட்டுக.


## 22. மிருகமும் பறவையும்



ஒரு **மிருகம்.**



குதிரைக்குக்
கால்கள் நான்கு.



குதிரைக்குக்
குளம்பு உண்டு.



குதிரைக்குப் பற்கள் உண்டு.
குதிரைக்கு இறக்கை இல்லை.



குதிரைக்கு
வால் உண்டு.



குதிரை
குட்டி போடும்.

குதிரை **கனைக்கும்.** குதிரை **தீனி தின்னும்.**



காக்கை ஒரு **பறவை.**



காக்கைக்குக்
கால்கள் இரண்டு.



காக்கைக்குக் குளம்பும்
இல்லை; பற்களும் இல்லை.



காக்கைக்கு இறக்கை
உண்டு; வால் இல்லை.



காக்கை முட்டை இடும்.

**காக்கை கரையும்.** **காக்கை இரை தேடும்**

**பயிற்சி:**

மிருகத்திற்கும் பறவைக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை ?

# 23. கண்டு பிடி!



மரத்தில் மறைந்து இருக்கும்
குரங்கைக் கண்டுபிடி!



நீரில் மறைந்து இருக்கும்
மீனைக் கண்டுபிடி!



வயலில் ஒளிந்து இருக்கும்
தவளையைக் கண்டுபிடி!



வலையில் எட்டுக்கால் பூச்சி
எங்கே இருக்கிறது?

# 24. பாப்பாப் பாட்டு



ஓடி விளையாடு பாப்பா !— நீ

ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !

கூடி விளையாடு பாப்பா !—ஒரு

குழந்தையை வையாதே பாப்பா !



கொத்தித் திரியும் அந்தக் கோழி— அதை

கூட்டி விளையாடு பாப்பா !

எத்தித் திருடும் அந்தக் காக்கை— அதற்கு

இரக்கப் படவேணும் பாப்பா !



பாலைப் பொழிந்துதரும் பாப்பா !—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா !
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா !



வண்டி யிழுக்கும் நல்ல குதிரை ;—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு ;
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு ;—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா !



பொய் சொல்லக் கூடாது பாப்பா !—என்றும்
புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா !
தெய்வம் நமக்குத் துணை பாப்பா !—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா !—பாரதியார்.

# 25. குரல்



காகம் கரையும்.



யானை பிளிறும்.



கழுதை கத்தும்.




குதிரை கனைக்கும்




சிங்கம் கர்ச்சிக்கும்.



எலி கீச்சிடும்.



நரி ஊளையிடும்.



பன்றி உறுமும்.



கிளி கொஞ்சும்.



நாய் குரைக்கும்.



சேவல் கூவும்.




பாம்பு சீறும்.

நாம் பேசுகிறோம்.

## 26. பொன் மொழிகள்

1. காலையில் எழுந்து கடவுளை வணங்கு.
2. பல்லைத் துலக்கிப் படிக்கத் தொடங்கு.
3. கந்தை ஆனாலும், கசக்கிக் கட்டு.
4. கூழ் ஆனாலும், குளித்துக் குடி.
5. பாலே ஆயினும், பசித்தபின் பருகு.
6. அமிர்தம் ஆயினும் அளவோடு உண்.
7. ஓட்டமும் ஆட்டமும் உடலுக்கு நல்லவை.
8. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
9. நன்மை எண்ணு; உண்மை பேசு.
10. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.



# 27. செய்யப்படுதல்

பயிற்சி :

| | | |
|---|---|---|
| செருப்பு | மோதிரம் | சட்டை |
| புத்தகம் | நாற்காலி | கத்தி |

1. இவை மேலேயுள்ள படங்களின் பெயர்கள். இவைகளைப் படத்தில் உள்ள எண்ணின்படி வரிசையாக எழுது.

2. பின் வரும் பொருள்களால் மேலேயுள்ளவை செய்யப் பட்டவை. அவைகளை அடியில் கொடுத்துள்ள வாக்கியங் களில் பொருந்தும்படி அமைத்துக் காட்டு :—

| | | |
|---|---|---|
| பொன்னால் | மரத்தால் | எஃகால் |
| தோலால் | துணியால் | காகிதத்தால் |

1. கத்தி —— செய்யப்பட்டது.
2. மோதிரம் —— செய்யப்பட்டது.
3 செருப்பு —— செய்யப்பட்டது.
4. நாற்காலி —— செய்யப்பட்டது.
5. சட்டை —— செய்யப்பட்டது.
6. புத்தகம் —— செய்யப்பட்டது.

# 28. சிங்கமும் சுண்டெலியும்



சிங்கம் தூங்குதல்.
சுண்டெலி அதன்மேல்
ஏறிக் குதித்தல்.



சிங்கம் விழித்துக் கோபத்
துடன் பார்த்தல்.
சுண்டெலி நடுங்குதல்;
மன்னிக்க வேண்டுதல்.




சிங்கம் இரக்கப்பட்டு
சுண்டெலியை மன்னித்தல்.
சுண்டெலி மகிழ்ந்து ஓடுதல்.



வேடன் வலை கட்டுதல்.



சிங்கம் வலையில் அகப்படுதல்.



சிங்கம் வலையை அறுத்துக் கொண்டு வெளியே வர முயலுதல்.



சுண்டெலி வலையைப் பல்லால் அறுத்தல்.



சிங்கம் வலைக்கு வெளியில் வருதல்.




சிங்கம் சந்தோஷப்படுதல்.

சுண்டெலி ஆனந்தம் அடைதல்.

சுண்டெலி, நன்றியை மறக்கவில்லை.
நீ ஒருபோதும் நன்றியை மறவாதே.

பயிற்சி:

படம் பார்த்துக் கதையைச் சொல்லு; பின்பு எழுது.



## 29. விடுகவி

தலை இல்லை ; கை உண்டு.

மார்பு இல்லை ; முதுகு உண்டு.

வயிறு இல்லை ; இடுப்பு உண்டு.

விரல் இல்லை ; கை உண்டு.

பாதம் இல்லை ; கால் உண்டு.

உயிர் இல்லை ; உடல் உண்டு.

அது என்ன ?

பயிற்சி :

நாற்காலியின் படம் எழுது.

## 30. ஆண்—பெண்

1. தம்பி விளையாடப் போகிறான்.
2. தங்கை கோலம் போடுகிறாள்.
3. தந்தையார் கடைக்குச் செல்கிறார்.
4. தாயார் சாதம் சமைக்கிறாள்.
5. இவன் மிகவும் நல்லவன்.
6. இவள் மிகவும் நல்லவள்.
7. அவன் நடந்து வருகிறான்.
8. அவள் ஓடி வருகிறாள்.
9. கமலம் பாட்டுப் பாடுகிறாள்.
10. கண்ணன் பாடம் படிக்கிறான்.
11. பசு, பால் கறக்கின்றது.
12. எருது வண்டி இழுக்கின்றது.

தம்பி—தங்கை இவன்—இவள்

தந்தையார்—தாயார் அவன்—அவள்

கமலம்—கண்ணன்

பசு—எருது



## 31. பேராசை

கருப்பூர் என்னும் ஓர் ஊரில் நாய் ஒன்று இருந்தது. அது தெருத்தெருவாகத் திரிந்து இரை தேடுவது வழக்கம். ஒரு நாள் அது மிகுந்த பசியோடு தெரு வழியே சென்று கொண்டிருந்தது.

நாய் செல்லும் வழியில் ஒரு மாமிசத்துண்டு கிடந்தது. நாய் அதைக் கௌவி எடுத்துக்கொண்டு, தின்பதற்குத் தனி இடம் தேடிச் சென்றது.

நாய் போகும் வழியில் ஒரு சிறு வாய்க்கால் இருந்தது. வாய்க்காலைக் கடந்து போக குறுக்கே ஒரு மரப்பாலம் உண்டு. நாய் அந்தப் பாலத்தின் மேல் ஏறி நடந்தது.

பாலத்தின் கீழே நீர் ஓடிக்கொண்டிருந்தது நாய் குனிந்து பார்த்தது. நீரில் அதன் நிழல்



அதற்குத் தெரிந்தது. அந்த நிழல் தன்னுடையதே என்பதை அந்த நாய் தெரிந்துகொள்ளவில்லை. இன்னொரு நாய் இறைச்சித் துண்டோடு அங்கே இருப்பதாக அது நினைத்தது.

உடனே அந்த நாயுடன் சண்டையிட்டு அதன் இறைச்சித் துண்டையும் பிடுங்கித் தான் தின்ன வேண்டும் என்று அது எண்ணியது.

நாய் குறைப்பதற்காக வாயைத் திறந்ததும் இறைச்சித் துண்டு நீரில் விழுந்து நீரோட்டத்தோடு போய்விட்டது. நாய் ஏமாறிப் போயிற்று.

'பேராசை பெருநஷ்டம்.'

**கேள்விகள் :**

1. 'மாமிசம்' என்பதற்கு இன்னொரு பெயர் என்ன?
2. மாமிசத் துண்டை நாய் எப்படி இழந்தது?
3. நீரோட்டம்—பிரித்துச் சொல்லு.



## 32. ஔவையார்

ஔவையார் என்பவர் ஒரு கிழவியார். அவர் முன் காலத்தில் நாம் வசிக்கும் தமிழ் நாட்டில் வசித்திருந்தார். அவர் மிகவும் படித்தவர்; நல்ல குணமும் அன்பும் உடையவர். ஆகையால், அவரை எல்லாரும் 'ஔவையார்' என்று மரியாதையாக வழங்குவது வழக்கம்.

குழந்தைகள் நல்ல குணமும் ஒழுக்கமும் கல்வியும் உடையவர்களாகி வாழ வேண்டும் என்பது ஔவையார் ஆசை. அதனால், அவர் ஊர் ஊராகச் சென்று, ஜனங்களுக்குப் புத்திமதிகள் சொல்லி

வந்தார். அரசர்கள் கூட ஔவையாருக்கு மரியாதை செய்தார்கள்.

ஔவையார் குழந்தைகளுக்குத் தகுந்த பாட்டுக்கள் பல பாடியிருக்கிறார். ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வாக்குண்டாம் என்னும் நூல்கள் ஔவையார் பாடியவை. ஔவையார் பாட்டுகள் மிகவும் அழகாய் இருக்கும்.

ஔவையார் ஓர் ஏழை; ஆனாலும் படிப்பினால் மிகவும் பெருமை அடைந்தார். பெண்களும் புருஷர்களும் கல்வி கற்று நன்மை அடைய அவர் பாடு பட்டார். ஆகையால், அவரை நாம் மறக்கக் கூடாது. நாம் அவர் பாட்டுக்களைப் படித்து, அவற்றில் சொல்லியபடி நடக்க வேண்டும்.

'ஔவையார் பாடல், அமிர்தம் ஆகும்.'
'ஔவையார் வாக்கு, தெய்வ வாக்கு.'

**கேள்விகள் :**

1. தந்தை, அம்மை, தமக்கை—இவற்றோடு 'ஆர்' சேர்த்துச் சொல்லு.
2. ஔவையார் பாடிய நூல்கள் எவை?

## 33. வானம் விழுந்த கதை

ஓர் ஊரில் கோழிக்குஞ்சு ஒன்று இருந்தது. அது இரை தேடக் காட்டுக்குச் சென்றது. செல்லும் வழியில் ஓர் ஆலமரத்திலிருந்து ஆலம்பழம் ஒன்று



அதன் தலைமேல் விழுந்தது. அது கண்ட கோழிக்குஞ்சு, "ஐயோ! வானமே இடிந்து என் தலைமேல் விழுந்துவிட்டதே! என்ன செய்வேன்! நான் சென்று இதை அரசரிடம் முறையிடுவேன்!" என்று கத்திக் கொண்டே திரும்பிப்போயிற்று.

அது போகும் வழியில் பெட்டைக் கோழி ஒன்று அதன் எதிரே வந்தது. கோழிக்குஞ்சு அதைப் பார்த்து, "அம்மா, நீ எங்கே போகிருய்?" என்று




கேட்டது. அந்தப் பெட்டைக் கோழி, "நான் இரை தேட வனத்திற்குப் போகிறேன்," என்றது.

கோழிக்குஞ்சு, "ஐயோ! போகவே போகாதே! நானும் காட்டிற்குப் போகத்தான்

போனேன். வானமே இடிந்து என் தலைமேல் விழுந்தது! அதை மன்னரிடம் சொல்லப் போகிறேன். நீயும் வருகிறாயா?'' என்றது. பெட்டைக்கோழி, 'சரி' என்று அதனுடன் சென்றது.

அவை இரண்டும் செல்லும் வழியில் சேவல் ஒன்று எதிரில் வந்தது. பெட்டைக் கோழி, "சேவலே, சேவலே, நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்டது. சேவல், "நான் ஆகாரம் தேடக் காட்டிற்குப் போகிறேன்,'' என்றது.



பெட்டைக்கோழி, "போகாதே. இந்தக் கோழிக்குஞ்சு காட்டிற்குப் போயிற்றாம். வழியில் வானம் இடிந்து இதன் தலையில் விழுந்ததாம். நாங்கள் இதை அரசரிடம் சொல்லப் போகிறோம். நீயும் வருகிறாயா?'' என்றது. சேவலும், 'ஆகட்டும்!'' என்று அவற்றுடன் சென்றது.



அவை மூன்றும் செல்லும் போது எதிரில் ஒரு குள்ள வாத்துவந்தது. "வாத்தே, வாத்தே, எங்கே போகிருய்?" என்று அவை கேட்டன. வாத்து "நான் இரைதேடக் காட்டுக்குச் செல்கிறேன்," என்றது.

உடனே சேவல், "போகாதே, போகாதே. இந்தக் கோழிக்குஞ்சு இரைதேடக் காட்டுக்குப் போயிற்ரும். போகும் போது வானம் இடிந்து இதன் தலைமேல் விழுந்ததாம். நாங்கள் இதை வேந்தரிடம் சொல்லப்போகிருேம். நீயும் வருகிருயா?" என்று கேட்க, அதுவும் கூட வர சம்மதித்தது.

இவை நான்கும் செல்லும் வழியில் ஒரு குள்ள நரி எதிரில் வந்தது. அது இவைகளைப் பார்த்து, "சினேகிதர்களே, இவ்வளவு அவசரமாக எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டது.



குள்ளவாத்து, "இந்தக் கோழிக்குஞ்சு காட்டுக்குப்போகும் வழியில் வானம் இடிந்து இதன் தலை

மேல் விழுந்ததாம். இதை நாங்கள் வேந்தரிடம் தெரிவிக்கப் போகிறோம். நீயும் வருகிறாயா?" என்று கேட்டது.

குள்ள நரி, "நல்ல வேட்டை கிடைத்தது! இவைகளைத் தந்திரமாக நமது இடத்திற்கு அழைத்துச் சென்று, கொன்று தின்னலாம்!" என்று எண்ணிக்கொண்டு, "சரி; போகலாம்; வாருங்கள்," என்றது.



இவை ஐந்தும் சென்றுகொண்டிருந்தன. அப்பொழுது திடீரென்று ஒரு வேட்டை நாய் அங்கே வந்தது. அதைக் கண்டதும் குள்ள நரி

ளைவிட்டுக்கொண்டு ஓடி ஒளிந்தது. பக்கத்தில் இருந்த குளத்தில் வாத்து இறங்கி விட்டது. கோழிக்குஞ்சும் பெட்டைக்கோழியும் ஓடித் தப்பின. சேவல், பறந்து ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டது. நரியின் எண்ணம் பலிக்கவில்லை.

### கேள்விகள்:

1. அரசன், காடு—வேறு பதங்கள் சொல்லு.
2. இந்தப் பாடத்தில் வந்துள்ள பிராணிகள் எவை?
3. நரி என்ன நினைத்தது? அது எதனால் ஏமாறியது?
4. வானம், வனம்—வித்தியாசம் என்ன?
5. சென்றது, போயிற்று, விழுந்தது—இந்த வார்த்தைகளைக் கொண்டு முடியும்படி ஒவ்வொரு சிறு வாக்கியம் எழுத

# 34. கவனித்து வாசி

தம்பியைச் சீக்கிரம் கூப்பிடு.

பாடத்தைக் கவனமாய் வாசி.

கத்தியால் இலையை அறு.

கையால் நெருப்பைத் தொடாதே.

புத்தகத்துக்கு அட்டை போடு.

குழந்தைக்கு முத்தம் கொடு.

துஷ்டரோடு எப்போதும் சேராதே.

நல்லவரோடு எப்போதும் பழகு.

குடத்தில் தண்ணீர் இருக்கிறது.

செடியில் புஷ்பம் இருக்கிறது.

| | |
|---|---|
| தம்பி—தம்பியை | புத்தகம்—புத்தகத்துக்கு |
| பாடம்—பாடத்தை | குழந்தை—குழந்தைகளுக்கு |
| கத்தி—கத்தியால் | துஷ்டர்—துஷ்டரோடு |
| கை—கையால் | நல்லவர்—நல்லவரோடு |

குடம்—குடத்தில்
செடி—செடியில்

குறிப்பு: பிள்ளைகள் மேலே காட்டியுள்ள பதங்களை அமைத்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லும்படி செய்க.



## 35. எலிக் கூட்டம்

எலியைப் பூனை எமன்போல
எங்கும் பிடித்து வருத்துவதால்
எலிகள் கூட்டம் கூடி அதை
எய்க்கும் வழியைத் தேடினவே. 1

'பூனைக் கழுத்தில் மணியொன்று
புனைந்து விட்டால் இனியென்றும்
பூனை வரும்போ தொலிகேட்டுப்
போய்நாம் ஒளிந்து வாழ்ந்திடலாம்.

என்றோர் எலிதான் கூறியதை
எல்லாம் கேட்டுச் சரியென்ன,
'நன்றே! பூனைக் கழுத்தினில் யார்
நடுங்கும் மணியைக் கட்டிடுவீர்?' 3

என்னக் கேட்ட கிழஎலிக்கே
எதுவும் கூற முடியாமல்
சின்ன எலிகள் பேசாமல்
சிரத்தை கவிழ்த்தே சிந்திக்க. 4

அப்போ தங்கே ஒருபூனை
அணுகும் சத்தம் கேட்டெலிகள்
குப்புற் றோடி வளைகளிலே
கூடி அச்சம் நீங்கினவே. 5


இந்தக் கதையால் நாமறிவ
தென்றும் இயலாச் செயலை நாம்
சிந்தித் திடுதல் ஒரு நாளும்
செய்யக் கூடா தென்பதுவே.

மே. வி. வே. பிள்ளை.

அரும்பதவுரை:— ஏய்க்கும் - ஏமாற்றும், புனைந்துவிட்டால் - கட்டிவிட்டால், ஒலி - சத்தம், நன்றே - நல்லதே, நடுங்கும் - அசையும், சிரத்தை - தலையை, சிந்திக்க - ஆலோசனை செய்ய, அணுகும் - நெருங்கி வரும், குப்புற்று - குதித்து, அச்சம்-பயம், இயலா - செய்யமுடியாத, சிந்தித்திடுதல்-நினைத்தல்.

கேள்விகள் :

1. எலிகள் எதற்காகக் கூடின?
2. எலிகள் செய்த முடிவு என்ன?
3. கிழ எலி என்ன கேட்டது?
4. கடைசியில் என்ன நேர்ந்தது?
5. இக்கதையால் நீ அறிவதென்ன?
6. இந்தக் கதையைச் சுருக்கமாகச் சொல்லு.



# 36. விடுகவி

பேச்சில்லை; மூச்சு விடும்.
உணவில்லை; ஊரைச் சுமக்கும்.
உயிரில்லை; ஓடித் திரியும்.
சோறில்லை; நீரைக் குடிக்கும்.
கண்ணில்லை; காதம் ஓடும்.
குரல் இல்லை; கூச்சல் இடும்.
கண்ட துண்டமாய்க் கரியைத் தின்னும்.
மழையில் நனையும்; வெயிலில் காயும்.
நோய் இல்லை; மருந்தும் தின்னாது.
எப்படிச் சொன்னாலும் அப்படிப் போகும்.
இது என்ன?

பயிற்சி:

நீ இரயில் ஏறிப்போன ஒரு பிரயாணத்தைப் பற்றிச் சொல்லு.



# 37. காகம்

1. காகம் ஒரு பறவை. அதை நாம் எங்கும் பார்க்கலாம். அது கருமை நிறம் உடையது. அதன் கழுத்து மட்டும் சாம்பல் நிறமாய் இருக்கும். சில காகத்துக்கு கழுத்தும் கறுப்பாகவே இருக்கும்.

2. காகம் ஒரு பொருளைப் பார்க்கும்போது தன் தலையைச் சாய்த்துக்கொண்டு பார்க்கிறது அல்லவா? அதற்கு ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு கண்ணாலேதான் பார்க்க முடியும்.

3. காகம் மரத்தின் கிளைகளில் கூடு கட்டி வாழும். அது தன் கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். காக்கைக் குஞ்சைப் பார்த்திருக்கிறீர்களா? அது கறுப்பாயும் அவலட்சணமாயும் இருக்கும். ஆனாலும், காகம் தன் குஞ்சுகளை இரை ஊட்டிக் காப்பாற்றி வளர்க்கும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா?

4. மாமிசம், புழு, பூச்சி, சோறு, தானியம் முதலிய பொருள்களைக் காகம் தின்னும். அழுகிய அசுத்தமான பண்டங்களைத் தின்பதில் அதற்கு ஆசை அதிகம்.

5. காகம் மிகவும் துணிச்சல் உள்ளது. குழந்தைகள் கையில் ஏதாவது தின்பண்டம் வைத்திருந்தால், அது சமயம் பார்த்து அதைப் பிடுங்கிக் கொண்டு போய்விடும்.

6. காகம் வீட்டின் கூரையிலும், சுவரிலும் உட்கார்ந்துகொண்டு, 'கா, கா' என்று கத்தும். காகம் கத்தினல், விருந்தாளிகள் வருவார்கள் என்று சொல்வது வழக்கம்.

7. காகம் சில நற்குணங்களும் உடையது. அது அதிகாலையில் எழும்; 'கா, கா' என்று கரைந்து, தன் இனத்தை அழைத்துக்கொண்டு இரைதேடச் செல்லும்; தனக்குக் கிடைத்த தீனியைத் தனியே தின்னுது; 'கா, கா' வென்று கரைந்து பல காகங்களுடன் சேர்ந்து உண்ணும். காகம் தினமும் குளிக்கும்; தன் உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும்.

கேள்விகள் :

1. காகம் எங்கே வசிக்கும்?
2. காகத்தைப்பற்றி வழங்கும் பழமொழி என்ன?
3. காகத்தின் நல்ல குணங்கள் எவை?



# 38. தபால்

[ஓர் உரையாடல்]

கமலம் : அப்பா ! என்ன எழுதுகிறீர்கள் ?

தந்தை : கடிதம் எழுதுகிறேன், கமலா.

கமலம் : யாருக்கு அப்பா கடிதம் எழுதுகிறீர்கள் ?

தந்தை : நேற்று யாரிடமிருந்து கடிதம் வந்தது? அவருக்குத்தான் எழுதுகிறேன்.

கமலம் : நேற்று மாமா இடத்திலிருந்து கடிதம் வந்தது.

தந்தை : அவருக்குத்தான் நானும் கடிதம் எழுதுகிறேன்.

கமலம் : அப்பா, நீங்கள் அடிக்கடி யார் யாருக்கோ கடிதம் எழுதுகிறீர்கள். உங்களுக்கும் யார்

யாரிடமிருந்தோ கடிதம் வருகிறது. நீங்கள் கடிதம் எழுதித் தெருக்கோடியில் உள்ள சிவப்புப் பெட்டியில் போடச் சொல்லுகிறீர்களே! அது எப்படி அப்பா, போய்ச் சேருகிறது?

தந்தை: யார் கடிதம் எழுதினாலும் அந்தப் பெட்டியில்தான் கொண்டுபோய்ப் போடுவார்கள். தபால் சேவகன் வந்து அவைகளை எடுத்துச் செல்வான்.

கமலம்: அவன் எடுத்துச் சென்று என்ன செய்வான்?

தந்தை: அவன் கடிதங்களைத் தபால் ஆபீசுக்குக் கொண்டுபோய் முத்திரை அடிப்பான்.

கமலம்: முத்திரையில் என்ன இருக்கும்?

தந்தை: ஊர்ப் பெயரும் தேதியும் இருக்கும்.

கமலம்: அப்பால் என்ன செய்வார்கள்?

தந்தை: அவர்கள் கடிதங்களை எல்லாம் விலாசத்தைப்பார்த்து, ஒவ்வோர் ஊர்க் கடிதங்களையும் தனித்தனியாகக் கட்டுக் கட்டுவார்கள்.

கமலம்: அந்தக் கட்டுகள் எப்படிப் போய்ச் சேரும்?

தந்தை: கட்டுகளையெல்லாம் பையில் போட்டுச் சேர்த்துக் கட்டிக் கைவண்டியில் தூக்கிப் போட்டுச் சேவகன் இரயில் ஸ்டேஷனுக்குக்

கொண்டுபோவான். இரயிலில் தபாலுக்காக ஒரு தனி வண்டி இருக்கும். அதில் உள்ள உத்தியோகஸ்தர் அந்தப் பைகளை வாங்கிக் கொள்வார்.

கமலம்: அவர் பைகளை வாங்கி என்ன செய்வார்?

தந்தை: அவர் அதை வாங்கி அவிழ்த்து, கடிதங் களைப் பிரித்து, அந்தந்த ஊர் இரயில் ஸ்டே ஷனில் வந்து காத்துக்கொண்டிருக்கும் தபால் சேவகனிடம் கட்டுகளைக் கொடுத்துக்கொண்டே பிரயாணம் செய்வார்.

கமலம்: சேவகன் அதை வாங்கி என்ன செய் வான்?

தந்தை: தபால் ஆபீசுக்கு எடுத்துச் செல்வான். தபால் ஆபீஸ் தலைவர் கட்டைப் பிரித்துக் கடிதங்களைச் சரி பார்ப்பார். பிறகு சேவகன் கடிதத்தின்மேல் அந்த ஊரின் பெயரும் அன்றைய தேதியுமுள்ள முத்திரையை அடிப் பான். பிறகு தபால்காரன் அந்தக் கடிதங்களை விலாசம் உள்ளவரிடம் சேர்ப்பான்.

கமலம்: இவ்வளவும் சும்மாவா செய்கிறார்கள்?

தந்தை: இல்லை; காசுக்குத்தான். நான் இப்போது எழுதுவது கார்டு. இதன் விலை முக்காலணு. கவர் எழுதினல் இரண்டு அணு ஆகும்.

கமலம்: அப்பா, இந்த ஏற்பாடு மிகவும் சௌகரியமாகத்தான் இருக்கிறது. கடிதமும் வெகு சீக்கிரம் வந்துவிடுகிறது. கடிதங்கூட நம்மைப் போல இரயில் பிரயாணம் செய்கிறதே.

தந்தை: கடிதம் அனுப்புவது போலவே பணமும் சாமான்களும் அனுப்பலாம். அவைகளும் பத்திரமாகப் போய்ச் சேரும்.

கமலம்: சரி. அப்பா! கடிதத்தை எழுதி முடித்து என்னிடமே கொடுங்கள். நான் தபால் பெட்டியில் போட்டுவிட்டு வருகிறேன்.

தந்தை: சரி, அப்படியே செய்.

## கேள்விகள்:

1. கடிதம் எப்படி அனுப்பப்படுகிறது?
2. கார்டு, கவர்—வித்தியாசம் என்ன?
3. 'தந்தி அடிப்பது' என்பது என்ன?
4. தந்தி அடிப்பதால் என்ன பிரயோசனம்?
5. கடிதத்திற்கு எப்போது முத்திரை அடிப்பார்கள்?

# I. ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. கண்டு ஒன்று சொல்லேல்.
14. இணக்கம் அறிந்து இணங்கு.
15. தந்தை தாய்ப் பேண்.
16. நன்றி மறவேல்.
17. இளமையில் கல்.
18. வஞ்சகம் பேசேல்.
19. பருவத்தே பயிர் செய்.

20. அறனை மறவேல்.

21. குணமது கைவிடேல்.

22. கூடிப் பிரியேல்.

23. செய்வன திருந்தச் செய்.

24. தெய்வம் இகழேல்.

25. தேசத்தோடு ஒத்துவாழ்.

அரும்பதவுரை:—1. அறம் - தருமம், 2. ஆறுவது தணிந்து அடக்கிக்கொள்வது, 3. இயல்வது - கொடுக்க கூடிய பொருள், கரவேல் - ஒளிக்காதே, 4. ஈவது - கொடு பது, விலக்கேல் - தடுக்காதே, 5. உடையது - (உன்னிடம் உள்ள செல்வத்தின் அளவைப்பற்றி, 6. ஊக்கம் - முயற் 7. எண் - கணிதம், எழுத்து - இலக்கணம், 8. இகழ்ச்சி தாழ்வு, 9. ஐயம் - பிச்சை, 10. ஒப்புரவு - உலக நடைக்கு பொருத்தமாக, ஒழுகு - நட, 11. ஓதுவது - படிப்ப 12. ஒளவியம் - பொறாமை வார்த்தை, 13. கண்டு - (ஒ றைப்) பார்த்து, ஒன்று - அதை வேறு விதமாக, 14. இண கம் - சேர்க்கை, 15. பேண் - காப்பாற்று, 16. நன்றி உபகாரம், 17. இளமை - பிள்ளைப் பருவம், 18. வஞ்சகம் வஞ்சனையான வார்த்தைகள், 19. பருவம் - ஏற்ற கால 20. அறன் - கடமைகள், 21. குணம் - நல்ல குணம், 22. கூடி ஒரு முறை சினேகம் செய்தபின், 23. செவ்வன - செய்யு காரியங்களை, 24. இகழேல் - பழிக்காதே, 25. தேசத்தோடு தேசமக்களோடு.

## II. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டா.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டா.

3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டா.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டா.

5. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டா.

6. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டா.

7. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டா.

8. தனந்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டா.

9. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டா.

10. குற்றம் ஒன்றும் பாராட்டித்
திரிய வேண்டா.

11. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டா.

12. மூத்தோர்சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டா.

13. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டா.

14. செய்த நன்றி ஒருநாளும்
மறக்க வேண்டா.

15. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டா.

அரும்பதவுரை:—1. ஒதாமல் - படிக்காமல், 2. பொ… லாங்கு - குற்றமான வார்த்தை, 3. மாதா - தாய், 4. இணங்க… சேர, 7. அடுத்தவரை - நம்பி வந்தவரை, 8. தனம் - செ… வம், 9. தருமம் - கடமைகள், 10. பாராட்டி - சிறப்பித்து… பேசி, 11. கற்றவர் - படித்தவர், 12. மூத்தோர் - பெரியோர்… 13. முன் கோபக்காரர் - பொறுமை இல்லாதவர், 14. நன்றி… உதவி, 15. தெய்வம் - கடவுள்.

# முகவுரை

புதிய முறைத் தமிழக வாசகம் என்னும் பெ... டன் திருந்திய முறையில் வெளிவரும் இந்நூல் வரிசை 1939-இல் வெளியிடப்பட்ட பாட இயல் (Syllabus) உளங்கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். அப்பாட இயலில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இதன்கண் இடம் பெற்றுள்ளது.

பாட இயலிற் கண்டவாறு புதிய சொற்கள் பாடந் தோறும் தரப்பட்டுள்ளன. கதை, உரை நடை, நாடகம், கைத்தொழில், பயிர்த்தொழில், இலக்கியம், சரித்திரம், பெரியோர் வரலாறு, கடிதங்கள் முதலியவை சம்பந்தமான பாடங்கள் இடம் பெற்றுள்ளன. நாட்டுப் பாடல்கள், பழம் பாடல்கள், புதிய பாடல்கள் என்பன உணர்ச்சி ஊட்டத் தக்கவாறு தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடக் கடைசியிலும் கேள்விகள், பயிற்சி, இலக்கணம் என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு சேர்க்கப்பட்டுள்ளன. படப் பயிற்சிகள், கதைப் படங்கள் இவற்றின் வாயிலாக மௌன வாசிப்பின் அவசியம் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம் எழுதுதல், குறிப்புக்களைத் தயாரித்தல் என்பனவற்றிற்குத் தக்கவாறு சில பாடங்கள் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இப்பாட வரிசை இக்கால நிலைமைக்கு ஏற்ற முற்போக்குடைய தமிழ்ப் பாட வரிசை என்றே கூறலாம். அறிஞர் இவ்வரிசையைக் கண்ணுற்று ஆசீர்வதிப்பாராக.

பதிப்பாளர்.




நிலா நிலா ஓடி வா

நில்லா மலே ஓடி வா


மலை மேலே ஏறி வா

மல்லிகைப் பூக் கொண்டு வா


# இது என்ன மிருகம்?



# இது என்ன பறவை ?




# இது என்ன மரம்?




















# இவர் யார்?




# இது என்ன வண்டி?
























டப்பா


டபடப படபட
டப்டப் பட்பட்

| | | | |
|---|---|---|---|
| ட | ப் | ப | ா |



பாப்பா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ା | _ | ட | ப | பா | ப் |



# படம்

| | | |
|---|---|---|
| ப | ட | ம் |

படம்

| | | |
|---|---|---|
| பா | ட | ம் |

பாடம்

பம்பம் டம்பம்

| | | | |
|---|---|---|---|
| ட | ப | ம | ம் |



# மரம்

| | | |
|---|---|---|
| ம | ர | ம் |

மரம்


| | | |
|---|---|---|
| பா | ர | ம் |

பாரம்

ரம் பம் பம்பரம்

| | | | |
|---|---|---|---|
| ட | ப | ம | ர |

மட மட









மா


கட்டங்களை நிரப்பச் செய்க.



# தாயும் பிள்ளையும்

சாய்ந்தாடு அம்மா சாய்ந்தாடு
சாயுங் கிளியே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு
கோயில் புறாவே சாய்ந்தாடு.






நா ய்          பா ய்

ந ய

| | |
|---|---|
| நா ய் | யா ர் |
| பா ய் | பா ர் |
| நா ம் | நா ர் |

| | |
|---|---|
| நா யா | பா ர் |
| யா ர் | பா ய் |
| நா ம் | யா ர் |

| நாய் | பாய் | நாம் | யார் |
|---|---|---|---|






காய்　　　　தாய்

க　　கா

த　　தா

| | |
|---|---|
| நகம் | காய் |
| பயம் | தாய் |
| ராமா | காகம் |
| தாதா | தாகம் |
| காகா | தாயார் |
| மாமா | காயம் |

| | | |
|---|---|---|
| காய் தா | காயம் பார் | தாய் |





அரம் கற

ர ற

| | | |
|---|---|---|
| அரம் | காய் | பற |
| மரம் | பாய் | கற |
| பயம் | தாய் | மற |

ராதா மாதா


ராமா தாடா

கறகற மறமற பறபற

| | | | |
|---|---|---|---|
| காரம் | கற | ர | ற |



சக்கரம்



சட்டம்

க்க ச்ச ட்ட த்த ப்ப

| | | |
|---|---|---|
| பக்கம் | மச்சம் | பட்டம் |
| பத்தர் | தச்சர் | கட்டம் |


ர ப் ப ர்

ச க் க ர ம்

ச ப் ப ர ம்

| சக்கரம் | சப்பரம் | கட்டம் |
|---|---|---|





மான் கண்

ன் ண்


மான் கண்
நான் மண்
யான் கான்

மான் கண்
நான் யார்
ராமன் தாய்
பணம் தா

கண்ணன் மன்னன் பண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ன | ன் | ண | ண் | ந | ந் |





வாணம் கால்

வ வா

ல லா

| | | |
|---|---|---|
| வடம் | கல் | லாடம் |
| வார் | கால் | லாபம் |
| வாணம் | வால் | பாலன் |

பால் கற

நாய் வால்

வ ல வ ல    ச ல ச ல    க ல க ல

| நல்ல லாபம் | வாகனம் |
|---|---|



த ப க் ம் க



ர ப ம் ப ம்



ப ம் த ட் ம் ட




ர ச க் ம் க

பதக்கம் தம்பட்டம்

பம்பரம் சக்கரம்

கட்டங்களை நிரப்பச் செய்க.





பழம் தாளம்


ழ ள


| | | |
|---|---|---|
| பழம் | தாளம் | பள்ளம் |
| படம் | பாளம் | பவழம் |

மாம்பழம் கள்ளன் பார்

| | | |
|---|---|---|
| மழமழ | தளதள | சளசள |
| வழவழ | வளவள | பளபள |

| | |
|---|---|
| வயல் களம் | மாம் பழம் |





சங்கு          மஞ்சள்

ங          ஞ

ங் க ஞ் ச ண் ட ந் த ம் ப

| | | |
|---|---|---|
| பங்கம் | மஞ்சள் | பண்டம் |
| சங்கம் | மஞ்சம் | மந்தம் |
| மங்களம் | ஞானம் | ரம்பம் |

எழுத்துப் பயிற்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ச | ண | நா | ப | மா | த | வா | ன் | ஞ |
| ட | கா | ச் | ஞ | த் | தா | ந | ர | ய | ற் |
| ட் | டா | க் | சா | ண் | ந் | பா | ல | மூா | வ |
| ங | ஞா | ப | ம | யா | ளா | ன | ஞு | ஞ | ய |
| ஞா | ஙா | ஞ் | ரா | ழ் | ள | ற | ர் | வ் | ர |
| ங் | ம | லா | வ | ழ | ஞ | ய் | ள் | ல் | ல |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ங | ஞ | ண | ந | ம | ன |



ஆனை ஆனை அழகர் ஆனை ;
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை ;
கட்டிக் கரும்பை முறிக்கும் ஆனை ;
எட்டித் தேங்காயைப் பறிக்கும் ஆனை ;
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைத்தது ;
பட்டண மெல்லாம் பறந்தோடிப்
போயிற்றே





அணா ஆரம்

அ ஆ

அணா

ஆரம்

அ ணா ஆ ர ம் ம ன் ன ன்

அ ண் ணா ஆ க ா க ன் னா ன்

அ ம் ம ா ஆ ல் வ ண் ணா ன்

ஆ ட் ட ம் ஆ ண் ட வ ன் ஆ ல ம ர ம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப |
| | ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன |
| ஆ | கா | ஙா | சா | ஞா | டா | ணா | தா | நா | பா |
| | மா | யா | ரா | லா | வா | ழா | ளா | றா | னா |





இஞ்சி கிளி

இ கி

இஞ்சி கிளி மயில் சரி

இடம் பிடி தயிர் சிரி

இஞ்சி காரம் அதிகம்

இது நல்ல இடம்

இவன் கண் விழித்தான்

பன்றி கரிய பிராணி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | கி | ஙி | சி | ஞி | டி | ணி | தி | நி | பி |
| | மி | யி | ரி | லி | வி | ழி | ளி | றி | னி |





ஈட்டி கீரி

ஈ கீ

| | | |
|---|---|---|
| ஈ | தீபம் | வெந்நீர் |
| ஈட்டி | நீர் | பன்னீர் |
| சீட்டி | மீன் | தண்ணீர் |
| சீப்பு | சீனி | கண்ணீர் |

ஈ ச் ச ம ர ம் மீ ன் கு ள ம்

த ந் த ச் சீ ப் பு ஈ ய ச் ச ட் டி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ | கீ | ஙீ | சீ | ஞீ | டீ | ணீ | தீ | நீ | பீ |
| | மீ | யீ | ரீ | லீ | வீ | ழீ | ளீ | றீ | னீ |






உரல் குரங்கு

உ கு

உளி குடம் சுக்கு குரங்கு
உரல் முறம் மூக்கு சிரங்கு

உரலில் அவல் இடி
குடத்தில் நீர் பிடி
நீ பந்து உருட்டு
முறுக்குத் தின்னு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | கு | ஙு | சு | ஞு | டு | ணு | து | நு | பு |
| | மு | யு | ரு | லு | வு | ழு | ளு | று | னு |





ஊதல்　　　　　　　　　　பூ

ஊ　　　　　　　　　　பூ

ஊஞ்சல்　　　　　　　　ஆடு

அடுப்பு　　　　　　　　ஊது

கூட்டம்　　　　　　　　கூடு

தாழம்　　　　　　　　　பூ


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊ | கூ | ஙூ | சூ | ஞூ | டூ | ணூ | தூ | நூ | பூ |
| | மூ | யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ | றூ | னூ |




இவர் நம்



இது



இது




இது

படம் பார்த்துக் கட்டங்களை நிரப்பச் செய்க.



எலி




பெட்டி

எ பெ

எருமை மாடு
மூங்கில் ஏணி
இரும்புப் பெட்டி
வெள்ளிச் செம்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ | தெ | நெ | பெ |
| | மெ | யெ | ரெ | லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |





ஏணி தேள்

ஏ தே

| | | |
|---|---|---|
| ஏணி | ஏப்பம் | தேன் |
| ஏடு | ஏற்றம் | கேலி |
| ஏது | ஏக்கம் | மேல் |

நல்ல பேனா மேல்மாடி
பேன் கடி கேட்டுப்படி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏ | கே | ஙே | சே | ஞே | டே | ணே | தே | நே | பே |
| | மே | யே | ரே | லே | வே | ழே | ளே | றே | னே |

## பார்த்து எழுது

பசு புல் மேயும்

குரங்கு மரத்தில் பாயும்

மீன் குளத்தில் நீந்தும்

கரடி காட்டில் வாழும்

பாம்பு புற்றில் வசிக்கும்


சாவி பூட்டில் இருக்கும்



1. சின்ன சின்ன குருவி
சிங்காரச் சிட்டுக் குருவி
என்னுடன் நீ ஆடவா
இனிய பாட்டுப் பாடிவா.

2. குந்திக் குந்தி நடந்துவா
கொண்டையைக் கொஞ்சம்
குலுக்கி வா
சொந்தம் ஆகத் தின்னவே
சோறும் நெய்யும் தருகிறேன்.





# ஐந்து கை


## ஐ கை

| | | |
|---|---|---|
| ஐந்து | கை | மலை |
| ஐயர் | பை | பனை |
| ஐயா | மை | மணை |

கந்தன் நல்ல பையன்
மீனை வலையால் பிடிக்கலாம்
காளை வண்டி இழுக்கும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ | கை | ஙை | சை | ஞை | டை | ணை | தை | நை | பை |
| | மை | யை | ரை | லை | வை | ழை | ளை | றை | னை |
| | | | ணை | லை | ளை | னை | | | |

# 1



ஒன்று கொம்பு


ஒ கொ

ஒரு கொம்பு ஒட்டகம்
ஒன்று கொக்கு கொடுக்கு
ஒண்டி கொட்டு பொம்மை

மொட்டைத் தலை
மல்லிகை மொட்டு
மான் கொம்பு
ரொட்டிக் கிடங்கு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒ | கொ | ஙொ | சொ | ஞொ | டொ | ணொ |
| | தொ | நொ | பொ | மொ | யொ | ரொ |
| | லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |





ஓணான் கோலம்

ஓ கோ

ஓர் ஆடு

ஓட்டம் ஓடு

கோலம் போடு

கோபம் கூடாது

ஓடம் சோம்பேறி


தோட்டம் கோபக்காரி

கோணல் சோளக்கொல்லை

தென்னஞ்சோலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓ | கோ | ஙோ | சோ | ஞோ | டோ | ணோ |
| | தோ | நோ | போ | மோ | யோ | ரோ |
| | லோ | வோ | ழோ | ளோ | றோ | னோ |





ஔவை வௌவால்

ஔ வௌ

எ:குப் பெட்டி

∴

| | | |
|---|---|---|
| எஃகு | ஔவை | பௌர்ணமி |
| அஃது | கௌவு | ஔடதம் |
| இஃது | வௌவால் | மௌனம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஔ | கௌ | ஙௌ | சௌ | ஞௌ | டௌ | ணௌ |
| | தௌ | நௌ | பௌ | மௌ | யௌ | ரௌ |
| ஃ | லௌ | வௌ | ழௌ | ளௌ | றௌ | னௌ |

# பார்த்து எழுது

| | | |
|---|---|---|
| எஃகினால் | பெட்டி | செய்யலாம் |
| ஏற்றம் | நீர் | இறைக்கும் |
| ஐந்து | ரூபா | கொடு |
| ஒரே | கடவுள் | உண்டு |
| ஓடம் | நீரில் | மிதக்கும் |
| ஔவை | பழுத்த | கிழவி |

## எழுத்துப் பயிற்சி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நூ | அ | நீ | பூ | லூ | டெ | ண | ல | நா |
| பௌ | வ | ஆ | தீ | நெ | யே | தொ | தி | ணூ |
| ரூ | நே | வி | இ | து | ரௌ | ஓ | சி | ட் |
| பே | பு | ழா | தூ | ஈ | டொ | ஞீ | ஹை | நோ |
| நு | ரு | ழ | ஹை | யோ | உ | தெ | நை | பீ |
| பெ | நா | மொ | ணீ | ஃ | ளி | ஊ | தா | வௌ |
| மி | யூ | மா | டு | மெ | ஞா | றீ | எ | தே |
| பை | மே | ஹா | னூ | த | டை | பு | ஹு | ஏ |
| லி | தெ | ஹூ | நொ | ரூ | பே | மை | ஞ | க் |
| நே | மெ | ழி | மௌ | தை | ஐ | ஞு | சீ | ஞ |
| க | தி | தோ | ணி | ழு | டா | ஓ | ச | ஐ |

# இவன் என்ன செய்கிறான்?





















தவலை தவளை


| | | | |
|---|---|---|---|
| அலை | அளை | பழம் | பலம் |
| கலை | களை | வழி | வலி |
| வலை | வளை | குழி | குளி |
| காலை | காளை | வாழை | வாளை |
| கல் | கள் | குழம்பு | குளம்பு |
| கொல் | கொள் | அரை | அறை |
| வில் | விள் | எரி | எறி |
| கலம் | களம் | ஏரி | ஏறி |
| நீலம் | நீளம் | மணை | மனை |
| புலி | புளி | மணம் | மனம் |

குறிப்பு :—இவ்வுச்சரிப்பு வேற்றுமைகளை, (சொல்வதாலும் எழுதுவதாலும் பன்முறை முயற்சித்து) அறியச்செய்க. ந, ன இவற்றின் உச்சரிப்பில் சிறிதே வேற்றுமை உண்டு; எனினும் '**ன**' சொல்லின் முதலில் வராது ; '**ந**' சொல்லின் இறுதியில் வராது ; இதனையும் புகட்டுக.



## உயரம் குள்ளம்

| | |
|---|---|
| அதிகம் | குறைவு |
| உண்மை | பொய் |
| கனம் | இலேசு |
| நல்லது | கெட்டது |
| நீளம் | குட்டை |
| பெரியது | சிறியது |
| மேலே | கீழே |
| வெளியே | உள்ளே |
| வேகம் | மெது |



காக்கா! கண்ணுக்கு
மை கொண்டுவா

குருவி! கொண்டைக்குப்
பூக் கொண்டுவா

கொக்கு! குழந்தைக்குத்
தேன் கொண்டுவா

கிளியே! கிண்ணத்தில்
பால் கொண்டுவா.



## கடிகாரம்.

மணி முள் நிமிஷம்

1. ஒன்று
2. இரண்டு
3. மூன்று
4. நான்கு
5. ஐந்து
6. ஆறு
7. ஏழு
8. எட்டு
9. ஒன்பது
10. பத்து
11. பதினொன்று
12. பன்னிரண்டு



கூவும்



உறுமும்



குரைக்கும்



கனைக்கும்



சீறும்

படம் குறிக்கும் சொற்களை எழுதச் செய்க.

குதிரைக்குக் —— நான்கு

சேவலுக்குக் —— இரண்டு

நல்ல பாம்பு —— எடுக்கும்

கடிகாரம் —— காட்டும்

புத்தகம் —— உதவும்

சேவலுக்குக் —— உண்டு

---

கோடிட்ட இடங்களை நிரப்பச் செய்க.



பந்து

ஆடுகிறார்கள்



கோலாட்டம்

அடிக்கிறார்கள்



குளத்தில்

நீந்துகிறார்கள்

மீன் நீந்துகிறது
தவளை தத்துகிறது
குரங்கு தாவுகிறது
குதிரை ஓடுகிறது

# கறிகாய்

| | |
|---|---|
| வாழைக்காய் | வெண்டைக்காய் |
| கத்தரிக்காய் | பரங்கிக்காய் |
| புடலங்காய் | பச்சை மிளகாய் |
| அவரைக்காய் | பீர்க்கங்காய் |
| பாகற்காய் | பூசனிக்காய் |

கருணைக் கிழங்கு
சேனைக் கிழங்கு
உருளைக் கிழங்கு
வள்ளிக் கிழங்கு

இஞ்சி கொத்தமல்லி
கறிவேப்பிலை



# சாப்பாடு

| | | |
|---|---|---|
| சோறு | குழம்பு | அப்பளம் |
| பருப்பு | சாம்பார் | வடை |
| பச்சடி | ரஸம் | பக்ஷணம் |
| கறி | பாயசம் | இலை |
| பொறியல் | ஊறுகாய் | நெய் |
| கூட்டு | தயிர் | மோர் |

| | |
|---|---|
| இட்டலி | தோசை |
| பொங்கல் | பூரி |
| வெற்றிலை | காபி |

படம் பார்த்துக் கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களை அமைத்துப் படிக்கச் செய்க.



முருகன் ————————.



சுல்தான் ————————.



தாமஸ் ————————.



கமலம்——————.



பேரி——————.



தாஜ்பீபி——————.



# கை எங்கே?

கை எங்கே? காக்கா கொண்டு போயிற்று.
காக்கா எங்கே? புளிய மரத்து மேலே.
புளிய மரம் எங்கே? வெட்டி ஆயிற்று.
வெட்டின கட்டை எங்கே?
அடுப்பெரித்து ஆயிற்று.
அடுப்பெரித்த சாம்பல் எங்கே?
பல் தேய்த்தாயிற்று.
பல் தேய்த்த குளம் எங்கே?
புல் முளைத்துப் போயிற்று.
புல் எங்கே?
யானையும் குதிரையும் தின்றுவிட்டன.
குதிரை எங்கே? கோட்டை வாயிலிலே.
யானை எங்கே? அரண்மனை வாயிலிலே.
கை வந்துவிட்டது! கை வந்துவிட்டது.



# வகுப்பு

பெஞ்சு நாற்காலி மேஜை புத்தகம்
படம் பலகை மைக்கூடு பேனு
படி இழு கவனி எழு

நாங்கள்———யில் இருக்கிறோம்.
உபாத்தியாயர்———யில் இருக்கிறார்.
அவர் முன்———இருக்கிறது.
நாங்கள்———படிக்கிறோம்.
சுவரில்———தொங்குகின்றன.

# என்ன பண்டகை ?



இக்கேள்விகட்குப் பதிலை வரவழைக்கவும்:—

1. படத்தில் இருப்பது என்ன கடை?

2. பிள்ளைகள் கடைக்காரரிடம் வாங்கியது யாது?

3. அடுத்தபடத்தில் உள்ள பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

4. பெண்ணின் பக்கத்தில் என்ன இருக்கின்றன?


5. தாயார் என்ன செய்கிறார்?

6. இலைகளுக்கு எதிரில் இருக்கிற பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

7. இவர்கள் கொண்டாடும் பண்டகை என்ன?

---


குறிப்பு:—'பண்டிகை' என்பது சாதாரண வழக்கு.



திராக்ஷைக் குலை



வாழைச் சீப்பு



வாழைத் தாறு



பூங் கொத்து



கரும்புக் கட்டு



# தோப்பு

1. நீ இப்படத்தில் என்ன என்ன பார்க்கிறாய்?
2. குரங்கு எங்கே இருக்கிறது?
3. குளத்தில் இருப்பவை என்ன பூக்கள்?
4. படத்தில் நிற்பவன் யார்?
5. குளத்தை அடுத்த பெரிய மரத்தில் என்ன என்ன இருக்கின்றன?



# ஊர்

இது எங்கள் ஊர்.
இதன் பெயர்—.
இங்கே எத்தனை வீடுகள்
இருக்கின்றன?
கோவில் எங்கே இருக்கிறது?
பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?
உன் ஊர் எது?

# சிங்கமும் சுண்டெலியும்



கேள்விகட்குப் பதிலை வரவழைக்கவும் :—

1. முதல் படத்தில் சிங்கம் என்ன செய்கிறது?
2. அச்சிங்கத்தின் மேல் இருக்கும் பிராணி யாது?
3. இரண்டாம் படத்தில் எலி எங்கே இருக்கிறது?
4. அந்த எலி என்ன செய்கிறது?
5. மூன்றும் படத்தில் சிங்கம் எங்கே இருக்கிறது?
6. அங்கு எலி என்ன செய்கிறது?
7. நான்காம் படத்தில் சிங்கம் என்ன செய்கிறது?
8. இந்தக் கதையைச் சொல்.

# என் தோழர்கள்



நாய் நல்ல தோழன்.

அது வீட்டைக் காக்கும்.



இதன் பெயர் பூனை.

பூனை எலி பிடிக்கும்.



முயல் துள்ளி ஓடும்.

அதன் காது நீளம்.



கிளி பச்சை நிறம்.

அது கொஞ்சிப் பேசும்.

உன் பெயர் என்ன?

என் பெயர்—.

உன் தகப்பனார் பெயர் என்ன?

என் தகப்பனார் பெயர்—.

நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

நான்—வகுப்பில் படிக்கிறேன்.

நீ எந்தத் தெருவில் இருக்கிறாய்?

நான்—தெருவில் இருக்கிறேன்.

நீ எந்தப் பள்ளியில் படிக்கிறாய்?

நான்—பள்ளியில் படிக்கிறேன்.

# சுகாதாரம்

காலையில் எழு.

கை கால்களை அலம்பு.

சுத்தமாய்க் குளி.

துணியைத் துவை.

உணவை உண்.

ஓடி விளையாடு.

இரவில் உறங்கு.

கடவுளைத் தொழு.





# பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.



காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு



மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

—பாரதியார்.

புதிய முறைத்

# தமிழக வாசகம்

## இரண்டாம் புத்தகம்

ஆசிரியர்:

R. விசுவநாத ஐயர், M. A., B. O. L.
தமிழ் விரிவுரையாளர், மாகாணக் கல்லூரி, சென்னை.

பண்டித S. முத்துரத்தின முதலியார்,
மாஜி-தமிழாசிரியர், நாட்டாண்மை உயர்நிலைப்பள்ளி,
திருவாரூர்.

திருத்திய ஆசிரியர்:
புலவர் மா. இராசமாணிக்கம், M. O. L., L. T.
தமிழ் விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

CONNEMARA PUBLIC LIBRARY
6 - MAR 1956
MADRAS

வெளியிட்டோர்:
வேங்கடராமா அண்ட் கம்பெனி
எஸ்பிளனேட் : : சென்னை.

பதிப்புரிமை] 1953 [விலை அணு 0—6—0

Fifth Edition May—1949
Sixth Edition May—1950
Seventh Edition July—1952
Eighth ,, June—1953

227
RB 1-54
CONNEMARA PUBLIC LIBRARY
6-MAR1956
MADRAS

Approved by the Text-book Committee for class use
vide Fort St. George, Dated 7-5-52,
Parts I & II, pages 25 & 100.

53314
2bc 211

Rajan Electric Press Madras—1.

# முகவுரை

6-MAR 1956

**புதிய முறைத் தமிழக வாசகம்** என்னும் பெயருடன் **திருந்திய முறையில்** வெளிவரும் இந்நூல் வரிசை, 1939-ல் வெளியிடப்பட்ட **பாட இயலை** (Syllabus) உளங்கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். அப்பாட இயலில் குறிக்கப்பட்டுள்ள **ஒவ்வொரு குறிப்பும்** இதன்கண் இடம் பெற்றுள்ளது.

பாட இயலிற் கண்டவாறு **புதிய சொற்கள்** பாடந்தோறும் தரப்பட்டுள்ளன. கதை, உரை நடை, நாடகம், **கைத்தொழில், பயிர்த்தொழில்,** இலக்கியம், சரித்திரம், பெரியோர் வரலாறு, கடிதங்கள் முதலியவை சம்பந்தமான பாடங்கள் இடம் பெற்றுள்ளன. **நாட்டுப் பாடல்கள். பழம் பாடல்கள், புதிய பாடல்கள்** என்பன உணர்ச்சி ஊட்டத் தக்கவாறு தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடக் கண்டசியிலும் **கேள்விகள், பயிற்சி, இலக்கணம்** என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு சேர்க்கப்பட்டுள்ளன. படப் பயிற்சிகள், கதைப் பாடல்கள் இவற்றின் வாயிலாக **மௌன வாசிப்பின்** அவசியம் வற்புறுத்தப்பட்டுள்ளது. **கடிதம் எழுதுதல், குறிப்புக் கலைத் தயாரித்தல்** என்பனவற்றிற்குத் தக்கவாறு சில பாடங்கள் தரப்பட்டுள்ளன.


சுருங்கக் கூறின், இப்பாட வரிசை இக்கால நிலைமைக்கு ஏற்ற முற்போக்குடைய தமிழ்ப் பாட வரிசை என்றே கூறலாம். அறிஞர் இவ்வரிசையைக் கண்ணுற்று ஆசீர்வதிப்பாராக.

**பதிப்பாளர்.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பசு | ... 1 |
| 2. | பிச்சைக்காரன் | ... 3 |
| 3. | நாய்க்குட்டி | ... 5 |
| 4. | நிறங்கள் | ... 7 |
| 5. | கீச்சி கீச்சி தம்பளம் (பாட்டு) | ... 9 |
| 6. | சுவைகள் | ... 10 |
| 7. | கோழியின் கதை | ... 12 |
| 8. | உறுப்புகளும் வேலைகளும் | ... 14 |
| 9. | கிழமைகள் | ... 16 |
| 10. | சுத்தம் (பாட்டு) | ... 18 |
| | படப்பயிற்சி-5 | ... 19 |
| 11. | தமிழ் மாதங்கள் | ... 21 |
| 12. | குடியானவன் | ... 23 |
| 13. | குடும்பம் | ... 25 |
| 14. | குடும்பம் (பாட்டு) | ... 27 |
| 15. | ஓசை—சொற்கள் | ... 30 |
| 16. | திசைகள் | ... 33 |
| 17. | ஏழை பாணவன் | ... 35 |
| 18. | கடைக்காரர் | ... 37 |
| 19. | சில ஒழுக்க முறைகள் | ... 40 |
| | படப்பயிற்சி—6 | ... 42 |
| 20. | ஊர்களுக்குப் போய்வருவது | ... 44 |
| 21. | எங்கள் பள்ளிக்கூடம் | ... 45 |
| 22. | எங்கள் வகுப்பு | ... 48 |
| 23. | பள்ளிக்கூடத் தோட்டம் | ... 51 |
| 24. | காக்கையின் தந்திரம் | ... 54 |
| 25. | நெற்பானையும் எலியும் (பாட்டு) | ... 57 |
| 26. | கடிகாரம் | ... 58 |
| 27. | தீபாவளி | ... 61 |
| 28. | ஒழுக்கமுள்ள பிள்ளைகள் | ... 64 |
| 29. | காற்று | ... 67 |
| | படப்பயிற்சி—7 | ... 70 |
| 30. | ரயில் வண்டி (பாட்டு) | ... 72 |
| 31. | மகாத்மா காந்தியார் | ... 73 |
| 32. | பழக்கடை | ... 75 |
| 33. | குறத்தி (பாட்டு) | ... 77 |
| 34. | உலக நீதி | ... 79 |
| 35. | கொன்றை வேந்தன் | ... 80 |

force of





6-MAR 1956
MADRAS

## படப் பயிற்சி—1

## இது என்ன? இதன் உபயோகம் என்ன?



















## படப் பயிற்சி—2

## இவர்கள் என்ன செய்கிறார்கள் ?



படப் பயிற்சி—3

## இவற்றின் உபயோகம் என்ன ?



## படப் பயிற்சி—4

## இவர்கள் என்ன செய்கிறார்கள் ?





# 1. பசு

புதிய சொற்கள் :—நிற்கிறது — குடிக்கிறது — பெரியது — சிறியது — பசுப்பால் — உடம்புக்கு — நல்லது.

1. இது பசுவின் படம்.

2. பசு நிற்கிறது.

3. கன்று பால் குடிக்கிறது.

4. பசு பெரியது. கன்று சிறியது.

5. பசுப்பால் உடம்புக்கு நல்லது.

## கேள்விகள்

1. இப்படத்தில் நீ என்ன பார்க்கிறாய் ?
2. பசு எதனில் கட்டப்பட்டு இருக்கிறது ?
3. தொட்டி ஏன் வைக்கப்பட்டு இருக்கிறது ?
4. பசுவின் கழுத்தில் என்ன கட்டப்பட்டு இருக்கிறது ?
5. அது ஏன் கட்டப்பட்டு இருக்கிறது ?
6. பசு என்ன என்ன தின்னும் ?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி :—

(1) கன்று——குடிக்கிறது.

(2) ——உடம்புக்கு நல்லது.

(3) பசு——கட்டப்பட்டு இருக்கிறது.

2. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை ? அவற்றைச் சொல் ; பிறகு கற்பலகையில் எழுது.

3. பாலின் நிறம் என்ன ? அதே நிறத்தையுடைய நான்கு பொருள்களைச் சொல்.

---

குறிப்பு—பசுவின் வருகையை அறிந்து மக்கள் விலகிப் போவதற்காக மணி கட்டப்பட்டு இருக்கிறது என்பதைப் பிள்ளைகட்கு அறிவிக்கவும்.



## 2. பிச்சைக்காரன்

**புதிய சொற்கள் :**—கிழவன் — இல்லாதவன் — இவனால் — வேலை செய்ய — முடியாது — அதனால் — பிச்சை — எடுக்கிறான் — வழி — காட்டி — வருகிறான் — கிழவனுக்கு — போட வேண்டும்.

1. கிழவன் கண் இல்லாதவன்.
2. இவனால் வேலை செய்ய முடியாது.
3. அதனால் இவன் பிச்சை எடுக்கிறான்.
4. ஒரு பையன் வழிகாட்டி வருகிறான்.
5. நாம் கிழவனுக்குப் பிச்சை போட வேண்டும்.

## கேள்விகள்

1. படத்தில் உள்ள பையன் என்ன செய்கிறான் ?

2. அவன் ஏன் கழியைப் பிடித்திருக்கிறான் ?

3. அவனுக்குப் பின் வருபவன் யார் ?

4. பையன் செய்வது நல்லதா ? கெட்டதா ?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு :—

(1) கிழவன் பிச்சை——.

(2) பையன்——காட்டியச்—.

(3) நாம் பிச்சை——வேண்டும்.

2. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல் ; அவற்றைக் கற்பலகையில் எழுது.

3. படத்தைப் பார்த்துக் கேள்விகட்குப் பதில் சொல் :—

(1) பையன் இடக்கையில் என்ன இருக்கிறது ?

(2) கிழவன் இடக்கையிய் என்ன இருக்கிறது ?

4. இல்லாதவன் × இருப்பவன்
முடியாது × முடியும்
வேண்டும் × வேண்டா
} இவை எதிர்ப் பதங்கள்

CONNEMARA PUBLIC LIBRARY
6-MAR 1956
MADRAS



# 3. நாய்க்குட்டி

**புதிய சொற்கள்** :—நாய்க்குட்டி — ரோந்து — சுற்றும் — ரொட்டி — தின்னும் — ரோஷம் —உள்ள —நாங்கள்—வளர்க்கும்—நல்ல—ஜாதி.

'ளொள் ளொள்'!

அது தான் நாய்க்குட்டி.

ரோந்து சுற்றும் நாய்க்குட்டி.

ரொட்டி தின்னும் நாய்க்குட்டி.

ரோஷம் உள்ள நாய்க்குட்டி.

நல்ல ஜாதி நாய்க்குட்டி.

## கேள்விகள்

1. நாய்க்குட்டி எவ்வாறு கத்தும்?

2. அது எதனைத் தின்னும்?

## பயிற்சி

**தாய்** **பிள்ளை**

1. நாய் நாய்க்குட்டி
   பூனை பூனைக்குட்டி
   குரங்கு குரங்குக்குட்டி } 'குட்டி' என்று வருவன.

   பசு பசுக் **கன்று**
   எருமை எருமைக் **கன்று** } 'கன்று' என்று வருவன.

இவற்றை நினைவில் வைத்துக் கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

**(குட்டி-கன்று)**

(1) குதிரைக்——.

(2) அது பசுக்——.


(3) இது யானைக்——.

(4). இது புலிக்——.

2. நீ இப் பாடத்தில் கற்ற புதிய சொற்களைச் சொல்; அவற்றைக் கற்பலகையில் எழுது.

3. நீ அறிந்த நாயை அல்லது நாய்க்குட்டியைப் பற்றிச் சில செய்திகளைச் சொல்.

## 4. நிறங்கள்



இலை பச்சை நிறம்




ரோஜா சிவப்பு நிற



சாமந்தி மஞ்சள் நிறம்



கடல் நீல நிறம்



சங்கு வெள்ளை நிறம்



காகம் கருமை நிற

**புதிய சொற்கள்** :— பச்சை — நிறம் — சிவப்பு— சாமந்தி — மஞ்சள் — கடல் — நீலம் — வெள்ளை — கருமை.

### பயிற்சி

1. இவற்றின் நிறங்களைச் சொல்; பிறகு எழுது:—

சுண்ணும்பு, எலுமிச்சம்பழம், மிளகாய், மிளகாய் வற்றல், ஆகாயம், கிளி, எருமை.

2. நீ பார்த்த பூக்களில் வெண்மையானவற்றைச் சொல்.

3. வாழைப்பழம், பாகற்காய், முல்லை—இவற்றின் நிறம் என்ன ?

4. உனக்குத் தெரிந்த சிவப்பு நிறப் பூக்களின் பெயர்களைச் சொல்.

5. நீ பார்த்த மஞ்சள் நிறப் பூக்களின் பெயர்களைக் கூறு.

6. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) தாழம்பூ——நிறம்.
(2) மல்லிகை——நிறம்.
(3) இரத்தம்——நிறம்.
(4) கோழி——வெண்மை——.

## 5. கீச்சி கீச்சி தம்பளம்

**புதிய சொற்கள்:—** கீச்சி— தம்பளம்— நொண்டி —ஆடுவான்— நோக்கம்— போல— பாடுவான்— குட்டிக்கரணம்— போடுவான்—கத்துவான்.

கீச்சி கீச்சி தம்பளம்

கியாம் கியாம் தம்பளம்

நொண்டி நொண்டி ஆடுவான்


நோக்கம் போலப் பாடுவான்

குட்டிக் காரணம் போடுவான்


குதிரை போலக் கத்துவான்

---


## 6. சுவைகள்



உப்பு கரிப்பு



மிளகாய் காரம்



மாங்காய் புளிப்பு



பாக்கு துவர்ப்பு



திராக்ஷை இனிப்பு



வேம்பு கைப்பு

**புதிய சொற்கள்:**— உப்பு— கரிப்பு— காரம்— புளிப்பு— பாக்கு— துவர்ப்பு— இனிப்பு— வேம்பு— கைப்பு.

## பயிற்சி

1. மிளகு, மாங்காய், மிட்டாய், கரும்பு, மாம்பழம், பாகற்காய், புளியம்பூ, மாம்பிஞ்சு, பலாச்சுளை இவற்றின் சுவைகளைச் சொல்.

2. நிறமும் சுவையும் சொல்:—வாழைப் பழம், எலுமிச்சம் பழம், பாக்கு, உப்பு.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—


(1) பாயசம்——இருக்கும்.
(2) புளி——இருக்கும்.
(3) மிளகு——இருக்கும்.
(4) வேப்பங்காய்——இருக்கும்.

4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) ———புளிப்பாக இருக்கும்.
(2) ———கசப்பாக———.
(3) ———இனிப்பாக இருக்கும்.
(4) மிளகுக் கஷாயம்———இருக்கும்.
(5) வெல்லம்——.

## 7. கோழியின் கதை

நான் ஒரு 

நான்  இட்டேன்.

முட்டையில்
இருந்து  வந்தது.

குஞ்சு பெரிய  ஆயிற்று.

சேவலை
ஒரு  தூக்கிப்
போய்
விட்டது.

**புதிய சொற்கள் :**—முட்டை —குஞ்சு—சேவல் —நரி—தூக்கிப் போய்விட்டது.

**பயிற்சி**

1. நீ இப்பாடத்தில் கற்றுக் கொண்ட புதிய சொற்களைச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) முட்டை——நிறம்.

(2) முட்டையில் இருந்து——வந்தது.

(3) குஞ்சு——ஆயிற்று.

(4) கோழி முட்டை——.

3. கோழி——பெண் பறவை.

சேவல்——ஆண் பறவை.

(1) கோழியைப்பற்றி நீ அறிந்தவற்றைச் சொல்.

(2) சேவலைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.

4. கோழி - பறவை இனத்தைச் சேர்ந்தது.

நரி - விலங்கு (மிருக) இனத்தைச் சேர்ந்தது.

உனக்குத் தெரிந்த நான்கு விலங்குகளின் பெயர்களையும் நான்கு பறவைகளின் பெயர்களையும் எழுது.

## 8. உறுப்புக்களும் வேலைகளும்

**புதிய சொற்கள் :—** உறுப்புக்கள் — வணங்குகிறோம்— கண்களால் — காண்கிறோம் — கேட்கிறோம் —முகர்கிறோம் — பேசுகிறோம் — வாயினால் — நாவினால்—சுவைக்கிறோம் — சொல்கிறோம் — நடக்கிறோம்.

### நாம்

1. தலையால் வணங்குகிறோம்.
2. கண்களால் காண்கிறோம்.
3. காதுகளால் கேட்கிறோம்.
4. மூக்கினால் முகர்கிறோம்.
5. வாயினால் பேசுகிறோம்.
6. நாவினால் சுவைக்கிறோம்.
7. கைகளால் செய்கிறோம்.
8. கால்களால் நடக்கிறோம்.

## பயிற்சி

1. தலையில் இருக்கும் உறுப்புக்களின் பெயர்களைச் சொல்; அவற்றை எழுது.

2. கோடிட்ட இடங்களில் கீழ் வருவனவற்றுள் தக்க சொற்களை அமைத்துப் படி :—

| | |
|---|---|
| காண்கிறோம் | கேட்கிறோம் |
| முகர்கிறோம் | சுவைக்கிறோம் |
| நடக்கிறோம் | செய்கிறோம் |

(1) நாம் காலால்———.
(2) நாம் கையால் வேலை———.
(3) நாம் காதால்———.
(4) நாம் மூக்கினால்———.
(5) நாம் கண்களால்———.
(6) நாம் நாவினால்———.

3. கேட்டல், பார்த்தல், சுவைத்தல், நடத்தல்—இவற்றைச் செய்யும் உறுப்புக்களின் பெயர்களைச் சொல்.

4. முருகன் சாப்பிட்டான்; ரோஜாப்பூவை முகர்ந்தான்; என்னைப் பார்த்தான்; நான் சொன்னதைக் கேட்டான்; அதை எழுதினான்; வீடு சென்றான்—இவற்றில் முருகனுடைய எந்த எந்த உறுப்புக்கள் வேலை செய்தன ?

# 9. கிழமைகள்

**புதிய சொற்கள்** :—தாதா — இன்று—கிழமை — செவ்வாய் — திங்கள் — நேற்று— நாளை — புதன் — வியாழன்—வெள்ளி—சனி—ஞாயிறு.

'தாதா, இன்று என்ன கிழமை?'

'தம்பீ, இன்று செவ்வாய்க் கிழமை.'

'தாதா, நேற்று என்ன கிழமை?'

'தம்பீ, நேற்று திங்கட்கிழமை.'

'தாதா, நாளை என்ன கிழமை?'

'தம்பீ, நாளை புதன்கிழமை.'

'தாதா, கிழமை எத்தனை?'

'தம்பீ, கிழமைகள் ஏழு.'

அவை-ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

## பயிற்சி

1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்; அவற்றைக் கற்பலகையில் எழுது.

2. ஏழு நாட்களின் பெயர்களைச் சொல்; எழுது.

3. இக்கேள்விகளுக்குப் பதில் சொல்:—

(1) பள்ளிக்கூடம் எந்தக் கிழமைகளில் வேலை செய்கிறது?

(2) நீ பள்ளிக்கூடம் போகாத கிழமைகள் எவை?

(3) நீ இதைப்படிக்கும் இன்று என்ன கிழமை?

(4) நேற்று என்ன கிழமை?

(5) நாளை என்ன கிழமை?

4. *நேற்று இன்று நாளை

இவற்றைக் கோடிட்ட இடங்களில் தக்கவாறு அமைத்து வாசி:—

(1) நான்——படித்தேன்.

(2) நான்——படிக்கிறேன்.

(3) நான்——படிப்பேன்.

5. **விளையாடு**:—இச்சொல்லைக் கோடிட்ட இடத்தில் தக்கபடி அமைத்து வாசி:—

(1) நான் நேற்று——.

(2) நான் நாளை——.

(3) நான் இன்று——.

*நேற்று, இன்று, நாளை—இவற்றின் பொருளைக் கால உணர்ச்சியோடு விளக்கச் செய்க.

# 10. சுத்தம்

**புதிய சொற்கள்:**—சுத்தம்—படுக்கை—விட்டு—எழுந்திடுவேன்—பண்ணிடுவேன்—அழுக்கு—போக—குளித்திடுவேன்—அழகாய்—வாரிடுவேன்—சரியாய்—தேய்ந்திடுவேன்—பாங்காய்—உடைகள்—உடுத்திடுவேன்—நகத்தில்—படியாமல்—அவற்றை—காத்திடுவேன்.

## பாட்டு

காலையில் படுக்கை விட்டு எழுந்திடுவேன் ;

கைகால் சுத்தம் பண்ணிடுவேன் ;

அழுக்குப் போகக் குளித்திடுவேன் ;

அழகாய்த் தலையை வாரிடுவேன் ;

பல்லைச் சரியாய்த் தேய்த்திடுவேன் ;

*பாங்காய் உடைகளை உடுத்திடுவேன் ;

நகங்களில் அழுக்குப் படியாமல்

நன்றாய் அவற்றைக் காத்திடுவேன்.

—ச.கு.க.

*பாங்காய்—ஒழுங்காக.

பட்டப் பயிற்சி

# ஆப்புப் பிடுங்கிய குரங்கு



## பயிற்சி

1. படம் பார்த்துக் கேள்விகளுக்குப் பதில் சொல்லச் செய்க :—

(1) முதல் படத்தில் இரண்டு பேர் என்ன செய்கிறார்கள்?

(2) இரண்டாம் படத்தில் குரங்கு என்ன செய்கிறது?

(3) மூன்றாம் படத்தில் குரங்கு என்ன செய்து விட்டது?

(4) நீ நான்காம் படத்தில் என்ன பார்க்கிறாய்?

(5) குரங்கு என்ன ஆயிற்று?

(6) அதற்கு ஏன் துன்பம் உண்டானது?

குறிப்பு :—இந்தக் கதையைச் சொல்லவும் எழுதவும் செய்க.

2. படத்தைக் கவனித்துக் கீழ்வரும் சொற்களைக் கோடிட்ட இடங்களில் தக்கவாறு அமைத்துப் படி:—

ஆப்பு ரம்பம் அசைக்கிறது
அறுக்கிறார்கள் அகப்பட்டது இறந்தது

(1) ——மரம் அறுக்க உதவும்.

(2) அறுத்த இடத்தில்——இருக்கிறது.

(3) குரங்கு ஆப்பை——.

(4) இருவர் மரத்தை——.

(5) குரங்கின் கால் மரப் பிளப்பில்——.

(6) கால் அகப்பட்டதால் குரங்கு——.

# 11. தமிழ் மாதங்கள்

**புதிய சொற்கள் :**—தமிழ்—மாதம்—சித்திரை—வைகாசி—ஆனி—ஆடி—ஆவணி—புரட்டாசி—ஐப்பசி—கார்த்திகை—மார்கழி—தை—மாசி—பங்குனி—வெயில்—குளிர்—காலம்.

| | |
|---|---|
| 1. சித்திரை | 7. ஐப்பசி |
| 2. வைகாசி | 8. கார்த்திகை |
| 3. ஆனி | 9. மார்கழி |
| 4. ஆடி | 10. தை |
| 5. ஆவணி | 11. மாசி |
| 6. புரட்டாசி | 12. பங்குனி |

இவை பன்னிரண்டும் தமிழ் மாதங்கள். சில மாதங்களில் வெயில் அதிகம். சில மாதங்கள் குளிர். இன்னும் சில மாதங்கள் மழைக்காலம்.

## பயிற்சி

1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்; அவற்றைக் கற்பலகையில் எழுது.

2. இக் கேள்விகளுக்குப் பதில் எழுது :—

(1) உன் பள்ளி எம்மாதத்தில் திறக்கப்பட்டது?

(2) தீபாவளி எந்த மாதப் *பண்டகை?

(3) நவராத்திரி விழா எந்த மாதத்தில் நடக்கும்?

(4) எந்த மாதத்தில் பொங்கல் பண்டகை கொண்டாடப்படும்?

(5) நீ எந்த மாதத்தில் பிறந்தாய்? (உன் தாயாரை அல்லது தகப்பனரைக் கேட்டுத் தெரிந்துகொள்.)

(6) நீ இப்பாடம் படிக்கும்பொழுது நடப்பது எந்த மாதம்?

(7) உனது வருஷப் பரீக்ஷை எந்த மாதத்தில் நடக்கும்?

(8) பெரிய விடுமுறை எந்த மாதங்களில் விடப்படும்?

3. ‖ வெயில் - மழை - குளிர் : ஒவ்வொன்றுக்கும் உரிய ஒரு மாதத்தின் பெயரைச் சொல்.

---

* 'பண்டிகை' என்றும் சொல்லப்படும்.

‖ வெயிலுக்கு உரிய மாதங்கள் இவை, மழைக்கு உரிய மாதங்கள் இவை, குளிருக்கு உரிய மாதங்கள் இவை என்பனவற்றைப் போதிக்கவும்.



# 12. குடியானவன்

**புதிய சொற்கள் :**—குடியானவன் — மாடுகளை — ஓட்டி — போகிறான் — கலப்பை — எடுத்து — செல்கிறான் — காலை — நேரம்—சூரியன்—புறப்படுவது — தெரிகிறதா — கொண்டாட்டம் — பறக்கின்றன — உழ — போகிறான்.

1. இவன் ஒரு குடியானவன்.
2. இவன் மாடுகளை ஓட்டிப் போகிறான்.
3. இவன் கலப்பையை எடுத்துச் செல்கிறான்.
4. இது காலை நேரம்.
5. சூரியன் புறப்படுவது தெரிகிறதா ?
6. காலையில் பறவைகளுக்குக் கொண்டாட்டம்.
7. அவை பறக்கின்றன.
8. குடியானவன் உழப் போகிறான்.

## கேள்விகள்

1. குடியானவன் என்பது யாருக்குப் பெயர் ?

2. இவன் எவற்றை ஓட்டிப்போகிறான் ? எங்கே போகிறான் ?

3. இவன் எதனை எடுத்துச் செல்கிறான் ?

4. பறவைகளுக்கு எப்பொழுது கொண்டாட்டம் ?

5. எவை பறக்கின்றன ?

6. குடியானவன் ஏன் மாடுகளை ஓட்டிப் போகிறான் ?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) குடியானவன்——ஓட்டிப்——.

(2) இவன்——எடுத்துச்—.

(3) காலையில்——க் கொண்டாட்டம்.

(4) குடியானவன்——ப் போகிறான்.

2. காலை × மாலை
எடு × போடு
தெரிகிறதா × தெரியவில்லை

இவை எதிர்ப் பதங்கள்.


இவற்றைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப்படி:—

(1) சூரியன்——யில் தோன்றுகிறான்.

(2) சூரியன்——யில் மறைகிறான்.

(3) குடியானவன்——எடுக்கிறான்.

(4) நீ புத்தகத்தைக் கீழே——.



## 13. குடும்பம்

1. படத்தில் ஏழு பேர் இருக்கிறார்கள்.
2. ஐந்து பேர் குழந்தைகள்.
3. ஒருவர் குழந்தைகளின் தகப்பனார்.
4. அவர் எங்கே உட்கார்ந்திருக்கிறார்?
5. அம்மா பாப்பாவை வைத்திருக்கிறார்.
6. அப்பா மகனோடு பேசுகிறார்.
7. இரண்டு பெண்கள் விளையாடுகிறார்கள்.
8. ஒரு பெண் அக்காள், ஒருத்தி தங்கை.
9. தாய் அருகில் ஒரு குழந்தை நிற்கிறது.
10. இவ்வளவு பேரும் சேர்ந்தது குடும்பம்.

## கேள்விகள்

1. படத்தில் இருப்பவர் எத்தனை பேர்?
2. குழந்தைகள் எத்தனை பேர்?
3. தகப்பனார் எங்கே உட்கார்ந்திருக்கிறார்?
4. அவர் என்ன செய்கிறார்?
5. தாயார் இடுப்பில் என்ன இருக்கிறது?
6. இரண்டு பெண்கள் என்ன செய்கிறார்கள்?
7. தாய் அருகில் எது இருக்கிறது?
8. குடும்பம் என்று எதற்குப் பெயர்?

## பயிற்சி

1. உன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்பதைச் சொல்.

2. நீ உன் சொந்தக்காரர் சிலர் பெயர்களைச் சொல்.

3. கோடிட்ட இடத்தில் தக்க சொல்லை வைத்துப் படி :—

(1)——உத்தியோகம் செய்கிறார்.

(2)——சமையல் செய்கிறார்.

(3)——தொட்டிலில் தூங்குகிறது.

(4)——பாடம் படிக்கிறேன்.

4. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்; அவற்றை எழுது.

———



# 14. குடும்பம்

(பாட்டு)

**புதிய சொற்கள்:** — ஒன்றை — ஓங்க — வளர்ப்பவன் — தந்தை — மற்ற — கருமங்கள் — மனே — வாழ்த்திட — செய்பவள் — அன்னே — ஏவல்கள் — செய்பவர் — மக்கள் — அன்ருே — மேவி — அனேவரும் — ஒன்ருய் — நல்ல — நடத்துதல் — கண்டோம்.

1. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை ;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனே
வாழ்த்திடச் செய்பவள் அன்னே ;




2. ஏவல் செய்பவர் மக்கள்—இவர்

யாவரும் ஓர் குலம் அன்றோ?

மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல

வீடு நடத்துதல் கண்டோம்.

—பாரதியார்

## கேள்விகள்

1. குடும்பத்தில் சம்பாதிப்பவர் யார்?
2. மற்றைக் கருமங்கள் செய்பவர் யார்?
3. மக்கள் என்ன செய்வார்கள்?
4. 'நல்ல வீடு' என்று எப்பொழுது சொல்லலாம்?

## பயிற்சி

1. இக்கேள்விகட்குப் பதில் கூறு:—
   (1) உன் வீட்டில் சம்பாதிப்பவர் யார்?
   (2) உன் தாயார் செய்யும் வேலைகள் எவை?
   (3) நீ வீட்டு வேலைகளில் எவற்றைச் செய்கிறாய்?
   (4) உன் அண்ணன் என்ன வேலை செய்கிறான்?

2. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்; அவற்றை எழுது.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) பொருள் சம்பாதிப்பவர்——
(தாயார், தகப்பனார்.)

(2) சமையல் செய்பவர்——
(தாயார், தகப்பனார்.)

(3) ஏவல் செய்பவர்——
(தகப்பனார், தாயார், மக்கள்.)

4. ஏவல், குடும்பம், ஒற்றை, கருமங்கள்— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

5. ஒற்றை × இரட்டை, தந்தை × தாய் } இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

# 15. ஓசை-சொற்கள்

**புதிய சொற்கள்:—** கூவுகிறது — கரைகிறது — குயில் — ஆந்தை — அகவுகிறது — அலறுகிறது— சீறுகிறது — குரைக்கிறது — ஊளையிடுகிறது — கத்துகிறது—கதறுகிறது — கனைக்கிறது — கழுதை— பன்றி — பிளிறுகிறது — உறுமுகிறது — சிங்கம் — கர்ஜிக்கிறது.

| | |
|---|---|
| கோழி | கூவுகிறது. |
| காக்கை | கரைகிறது. |
| குயில் | கூவுகிறது. |
| மயில் | அகவுகிறது. |
| ஆந்தை | அலறுகிறது. |
| பூனை | சீறுகிறது. |
| நாய் | குரைக்கிறது. |
| நரி | ஊளையிடுகிறது. |
| ஆடு | கத்துகிறது. |
| பசு | கதறுகிறது. |
| குதிரை | கனைக்கிறது. |
| கழுதை | கத்துகிறது. |
| பன்றி | உறுமுகிறது. |
| யானை | பிளிறுகிறது. |
| புலி | உறுமுகிறது. |
| சிங்கம் | கர்ஜிக்கிறது. |


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16

## பயிற்சி

1. கீழ்வரும் சொற்களில் தக்கவற்றைக் கோடிட்ட இடங்களில் நிரப்பிப் படி:—

கூவுகிறது அகவுகிறது பிளிறுகிறது

அலறுகிறது கனைக்கிறது உறுமுகிறது

(1) பன்றி——. (2) ஆந்தை ——.

(3) குதிரை——. (4) கோழி——.

(5) மயில்——. (6) யானை——.

2. கீழ்வரும் சொற்களைக் கோடிட்ட இடங்களில் நிரப்பிப் படி:—

நரி புலி குயில்

காக்கை ஆடு நாய்

(1) ——குரைக்கிறது. (2) ——கத்துகிறது.

(3) ——உறுமுகிறது. (4) ——கரைகிறது.

(5) ——ஊளையிடுகிறது. (6) ——கூவுகிறது.

3. நீ இப்பாடத்தில் படித்த புதிய சொற்களைச் சொல்; அவற்றைக் கரும்பலகையில் எழுது.

4. கூவுகிற உயிர்களின் பெயர்களை எழுது.

5. உறுமுகிற உயிர்களின் பெயர்களைக் கூறு.

5. கத்துகிற உயிர்களின் பெயர்களைச் சொல்.




# 16. திசைகள்

**புதிய சொற்கள்:** — தோன்றுகிறான் — திசை— கிழக்கு — மறைகிறான் — மேற்கு — முருகா — பார்த்து — நில் — நேராக — நீட்டு — வலக்கை — பக்கம் — தெற்கு — இடக்கை — **வடக்கு**.

1. சூரியன் காலையில் தோன்றுகிறான்.
2. சூரியன் தோன்றும் திசை **கிழக்கு**.
3. சூரியன் மாலையில் மறைகிறான்.
4. சூரியன் மறையும் திசை **மேற்கு**.
5. முருகா, நீ கிழக்கைப் பார்த்து நில்.
6. உன் கைகளை நேராக நீட்டு.
7. உன் வலக்கைப் பக்கம் **தெற்கு**.
8. உன் இடக்கைப் பக்கம் **வடக்கு**.

## கேள்விகள்

1. உன் வீடு எந்தத் திசையில் இருக்கிறது?
2. உன் பள்ளிக்கூடம் எந்தத் திசையில் இருக்கிறது?
3. நீ எந்தத் திசையில் தலைவைத்துப் படுக்கிறாய்?
4. நீ எந்தத் திசையில் கால் நீட்டிப் படுக்கிறாய்?
5. சூரியன் எப்பொழுது கிழக்கில் தோன்றுகிறான்?
6. சூரியன் எந்தப் பக்கம் மறைகிறான்?
7. சூரியன் எப்பொழுது மறைகிறான்?
8. உன் வீடு எப்பக்கம் நோக்கி இருக்கிறது?
9. நீ வகுப்பில் எந்தப் பக்கம் பார்த்து உட்காருகிறாய்?
10. உன் ஆசிரியர் எந்தப் பக்கத்தில் பார்த்துப் பாடம் கற்றுத் தருகிறார்?
11. நீ வடக்கையும் தெற்கையும் எப்படிக் கண்டுபிடிப்பாய்?


### பயிற்சி

1. நீ இப்பாடத்தில் கற்ற புதிய சொற்களைச் சொல்; பிறகு அவற்றை எழுது.

2. தோன்றும் × மறையும்
நீட்டு × மடக்கு
நில் × உட்கார்

இவை எதிர்ப்பதங்கள். இவற்றைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக அமைத்துப் படி:—

(1) சூரியன் மாலையில்——
(2) சூரியன் கிழக்கில்——
(3) நீ கைகளை நேராக——
(4) நீ கைகளை——
(5) நீ எழுந்து——
(6) நீ எப்பொழுது——



# 17. ஏழை மாணவன்

**புதிய சொற்கள்** :— பெயர் — ஓர் — ஏழை — என்னிடம் — இல்லை — கந்தன் — நல்ல — பையன் — கந்தனை — கண்டேன் — கந்தனோடு — கந்தனுக்கு — கந்தனில் — நண்பன் — கந்தனது — பெரியவன் — கந்தனிடம் — கந்தா — படிப்போம்.

1. என் பெயர் முருகன்.
2. நான் ஓர் ஏழை.
3. என்னிடம் புத்தகம் இல்லை.
4. கந்தன் நல்ல பையன்.
5. நான் கந்தனைக் கண்டேன்.
6. கந்தனோடு போனேன்.
7. நான் கந்தனுக்கு நண்பன்.

8. நான் கந்தனில் பெரியவன்.
9. இது கந்தனது பெட்டி.
10. புத்தகம் கந்தனிடம் இருக்கிறது.
11. கந்தா, நாம் படிப்போம், வா.

**கேள்விகள்**

1. முருகன் எப்படிப்பட்ட மாணவன்?
2. அவனிடம் என்ன இல்லை?
3. அவன் யாரைக் கண்டான்?
4. அவன் யாரோடு சென்றான்?
5. அவன் யாருக்கு நண்பன்?
6. அவன் எவனில் பெரியவன்?
7. புத்தகம் எங்கே இருக்கிறது?
8. முருகன் ஏன் கந்தன் வீடு சென்றான்?

**பயிற்சி**

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

| | | |
|---|---|---|
| கண்ணனை | கண்ணனுக்கு | கண்ணனோடு |
| கண்ணனில் | கண்ணனது | கண்ணனிடம் |

(1) இராமன்——க் கண்டான்.
(2) இராமன்——போனான்.
(3) இராமன்——நண்பன்.
(4) இராமன்——சிறியவன்.
(5) இது——புத்தகம்.
(6) புத்தகம்——இருக்கிறது.

2. *நண்பன், பெரியவன், பையன் — இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

---

2. *இப்பயிற்சியைப் படிப்படியாகப் பழக்குதல்நல்லது.



## 18. கடைக்காரர்

**புதிய சொற்கள்** :—கடை — சாமான் — விற்கிறுன் — தராசு — நிறுத்து — அரிசி — படி — அளந்து — அரை — கால் — ஆழாக்கு — மொத்தமாக — சில்லறையாக — லாபம் — நஷ்டம் — வியாபாரம் — வியாபாரி ... எல்லாம்.

1. இது ஒரு கடை.
2. கடைக்காரர் சாமான் விற்கிருர்.
3. அவர், புளியைத் தராசில் நிறுத்து விற்கிருர்.

4. அரிசியைப் படியில் அளந்து தரு வார்.

5. அவரிடம் படி, அரைப் படி, கால் படி, ஆழாக்கு எல்லாம் உண்டு.

6. அவர் சாமான்களை மொத்தமாக வாங்குவார்.

7. அவர் சில்லறையாக நமக்கு விற் பார்.

8. அதில் அவருக்கு லாபம் கிடைக் கும்.

9. அவர் நஷ்டத்துக்கு விற்கமாட் டார்.

10. அவர் செய்வது வியாபாரம்.

11. வியாபாரம் செய்பவர் வியாபாரி.

### கேள்விகள்

1. படத்தில் இருப்பது என்ன கடை?
2. கடைக்காரர் என்ன விற்கிறார்?
3. அவர் எதனைத் தராசில் நிறுப்பார்?
4. அவர் எதனைப் படியில் அளந்து தருவார்?
5. அவர் சாமான்களை எப்படி வாங்குவார்? எப்படி விற்பார்?
6. அதில் அவருக்கு என்ன கிடைக்கும்?

7. அவர் எதற்கு விற்கமாட்டார்?

8. வியாபாரி என்று யாருக்குப் பெயர்?

**பயிற்சி**

1. ஏற்ற வார்த்தைகளைக் கோடிட்ட இடத்தில் அமைத்து வாசி:—

(1) படி—— ஆழாக்கு——
(சிறியது, பெரியது)

(2) பருப்பை——தருவார்.
(அளந்து, நிறுத்து)

(3) பணத்தை——தருவார்.
(அளந்து, எண்ணி)

(4) புளி——தருவார். (நிறுத்து, எண்ணி)

2. நிறுத்துத் தரத்தக்க சாமான்கள் நான்கின் பெயர்களைச் சொல்.

3. அளந்து தரத்தக்க சாமான்கள் நான்கின் பெயர்களைச் சொல்.

4. எண்ணித் தரத்தக்க சாமான்கள் நான்கின் பெயர்களைக் கூறு.

5. ஒரு படியின் சிறிய அளவுகள் எவை? ஒரு ரூபாயின் சில்லறைகளைச் சொல்.

## 19. சில ஒழுக்க முறைகள்

**புதிய சொற்கள்**:—ஓரிடத்திலும்—சத்தம் — செய்தல் — ஆகாது — குப்பை — வழியில் — போடல் — காரியத்தை — காலத்தில் — எவரிடம் — மரியாதை வணக்கம் — சொல்ல — எழுந்து — பெரியோர் — தயை — கேட்க — எதையும் —நன்றி... கூறி—பெற— விளக்கமாய் ... பேசும் — போது — குறுக்கே—ஒழுக்கம்.

1. ஓரிடத்திலும் சத்தம் செய்தல் ஆகாது.
2. குப்பையை வழியில் போடல் ஆகாது.
3. காரியத்தைக் காலத்தில் செய்ய வேண்டும்.
4. பெரியோரிடம் எழுந்து பேச வேண்டும்.
5. பெரியோருக்கு வணக்கம் சொல்ல வேண்டும்.
6. எவரிடமும் மரியாதையாய்ப் பேசவேண்டும்.
7. 'தயை செய்து' என்று கேட்க வேண்டும்.
8. எதையும் நன்றி கூறிப் பெற வேண்டும்.
9. பேசும்போது விளக்கமாய்ப் பேச வேண்டும்.
10. ஒருவர் பேசும்போது குறுக்கே பேசலாகாது.

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) குப்பையை——போடல் ஆகாது.

(2) பெரியோரிடம்——பேச——.

(3) எதையும்——ப் பெற வேண்டும்.

(4) ஒருவர்——குறுக்கே——.

2. வணக்கம், பெரியோர், வழி, குப்பை — இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. பெரியோர் × சிறியோர்
பல × சில
ஆகும் × ஆகாது
இவை எதிர்ப்பதங்கள். இவற்றைக் கோடிட்ட இடங்களில் தக்கவாறு நிரப்பிப் படி:—

(1) ஆசிரியர்——; பிள்ளைகள்——.

(2) பள்ளிக்கூடத்தில் பெஞ்சுகள்——; நாற்காலிகள்——.

(3) பந்தை என்றால் தூக்கல்——; பாறையைத் தூக்கல்——.

## படப் பயிற்சி—6



## பயிற்சி

I. 1. எதிர்ப்பக்கத்தில் உள்ள படங்களைப் பார்த்துக் கீழே கண்ட கேள்விகளுக்கு விடை சொல்லவும், எழுதவும் செய்க.

1. முதற் படத்தில் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?
2. அடுத்த படத்தில் பையன் என்ன செய்கிறான்?
3. வீடு என்ன ஆகிறது?
4. அடுத்த படத்தில் இருவர் என்ன செய்கின்றனர்?
5. கொத்தன் என்ன செய்கிறான்?
6. பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

II. 1. தீபாவளிப் பண்டிகையன்று நீ என்ன என்ன செய்வாய்?

2. உனக்குத் தெரிந்த வேறு பண்டிகைகளின் பெயர்களைக் கூறு.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) தீபாவளி அன்று——தேய்த்துக் குளிப்பார்கள்.

(2) தீபாவளி அன்று—— ஆடை உடுத்துவார்கள்.

(3) தீபாவளி அன்று—— கொளுத்துவார்கள்.

* குறிப்பு:—இவற்றுக்கு வரும் பதில்களை ஒரு கதை ரூபமாகச் சொல்லவும், எழுதவும் செய்க.

——

# 20. ஊர்களுக்குப் போய் வருவது


பாட்டு



1

பட்டணம் போகலாம் ;
பட்டாடை வாங்கலாம்;
இடுப்பிலே கட்டலாம் ;
இசைவாக நடக்கலாம்;

2



திண்டுக்கல் போகலாம் ;
திருகு கூஜா வாங்கலாம் ;
தண்ணீர் அழகாய்க் குடிக்கலாம் ;
டக் டக் என்று நடக்கலாம் ;

3



மதுரைக்குப் போகலாம் ;
மல்லிகைப்பூ வாங்கலாம்;
சடையில் அழகாய்ச்
சூடலாம் ;
ஜாம் ஜாம் என்று
நடக்கலாம்,



# 21. எங்கள் பள்ளிக்கூடம்

**புதிய சொற்கள்:** — முன்பக்கம் — விளையாட்டு— மைதானம் — பின்பக்கம் — ஒவ்வொரு — அறை — ஆசிரியர் — தலைமை — கைப்பந்து — தண்டால் — கொத்து — பாத்தி — பாய்ச்சு — பயிர் — வளர்ப்போம்—கற்பி—நேசிக்கிறோம்—சொற்படி.

இந்தப் படத்தைப் பாருங்கள். படத்தில் இருப்பது எங்கள் பள்ளிக்கூடம். இதன் முன் பக்கம் விளையாட்டு மைதானம் இருக்கிறது. இதன் பின் பக்கம் தோட்டம் இருக்கிறது.

எங்கள் பள்ளியில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பும் ஒரு பெரிய அறையில் இருக்கிறது. ஆறும் அறையில் தலைமை ஆசிரியர் இருப்பார். ஏழாம் அறையில் பள்ளிக்கூடச் சாமான்கள் இருக்கும். எட்டாம் அறை ஆசிரியர்கள் அறை.

விளையாட்டு மைதானத்தில் நாங்கள் விளையாடுவோம். சிலர் கால் பந்து ஆடுவர்; சிலர் கைப்பந்து ஆடுவர்; சிலர் ஓடுவர்; சிலர் தண்டால் எடுப்பார்; சிலர் ஊஞ்சல் ஆடுவர்.

நாங்கள் தோட்டத்தைக் கொத்துவோம்; பாத்திகள் கட்டுவோம்; தண்ணீர் பாய்ச்சுவோம்; பயிர்களை வளர்ப்போம்.

எங்கள் ஆசிரியர்கள் நல்லவர்கள். அவர்கள் நன்றாகப் பாடம் கற்பிக்கிறார்கள். நாங்கள் அவர்களை நேசிக்கிறோம். அவர்கள் சொற்படி நடக்கிறோம்.

## கேள்விகள்

1. மைதானம் எங்கே இருக்கிறது? தோட்டம் எங்கே இருக்கிறது?

2. பிள்ளைகள் விளையாட்டுகள் எவை?

3. பள்ளியில் உள்ள அறைகள் எத்தனை? அவற்றின் உபயோகம் என்ன?

4. ஆசிரியர் எப்படிப்பட்டவர்?

5. பிள்ளைகள் ஏன் அவர்களை நேசிக்கிறார்கள்?

### பயிற்சி

இக்கேள்விகட்குப் பதில் சொல்:—

(1) உன் பள்ளிக்கூடத்தின் முன்பக்கம் என்ன இருக்கிறது? பின் பக்கம் என்ன இருக்கிறது?

(2) உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன.

(3) நீ பள்ளிக்கூட மைதானத்தில் என்னென்ன விளையாட்டுகளை விளையாடுகிறாய்?

(4) உன் பள்ளிக்கூடத்தில் தோட்டம் உண்டா?

(5) மேஜை, நாற்காலி கரும்பலகை, கற்பலகை—இவற்றின் உபயோகம் என்ன?

(6) பள்ளிக்கூடச் சாமான்களில் மரச்சாமான்கள் எவை? இரும்புச் சாமான்கள் எவை?

(7) படங்கள், கரும்பலகை, சீமைச் சுண்ணாம்பு, கரும் பலகையைத் துடைக்கும் துணி, பள்ளிக்கூடமணி—இவை பள்ளிக்கூடத்தில் எங்கு எங்கு இருக்கும்?

# 22. எங்கள் வகுப்பு




**புதிய சொற்கள்:**—எங்கள்—வகுப்பு—ஆசிரியர்—உட்கார்ந்திருக்கிறார் — தலைப்பாகை — இருக்கின்றன — தமிழில் — மாணவர் — கவனிக்கிறோம் — பாடத்தை — ஒருவராக — சுவரில் — எழுதுவோம்— திறக்கிறார்கள் — மூடுகிறோம் — பிறகு விளையாடுவோம்.

இது எங்கள் வகுப்பு. எங்கள் ஆசிரியர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். அவர் தலையில் அழகான தலைப்பாகை ஒன்று இருக்கிறது. மேஜையின் மேல் என்ன என்ன இருக்கின்றன?

நாங்கள் பலகைகளில் உட்கார்ந்திருக்கிறோம். நாங்கள் ஒன்பது பேர் இருக்கிறோம். பெண்கள் எத்தனை பேர்? ஆண்கள் எத்தனை பேர்? நாங்கள் மாணவர்கள்.

நாங்கள் தமிழ்ப் பாடம் படிக்கிறோம். முருகன் எழுந்து படிக்கிறான். நாங்கள் கவனிக்கிறோம். பிறகு அந்தப் பாடத்தை ஒருவர் பின் ஒருவராகப் படிப்போம்.

சுவரில் படங்கள் இருக்கின்றன. அவை என்ன படங்கள்? நாங்களும் படம் எழுதுவோம்.

பள்ளிக்கூடத்தைக் காலையில் திறக்கிறார்கள்; மாலையில் மூடுகிறார்கள். பிறகு நாங்கள் விளையாடுவோம்.

**கேள்விகள்**

1. படத்தில் உள்ள பிள்ளைகள் எத்தனை பேர்?
2. நாற்காலியில் இருப்பவர் யார்?
3. சுவரில் உள்ள படங்கள் எவை?
4. மாணவருள் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?
5. ஒருவன் படிக்கையில் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள்?

6. மாணவர்கள் எப்பொழுது விளையாடுவர்?

7. பள்ளிக்கூடம் எப்பொழுது திறக்கப்படும்? எப்பொழுது மூடப்படும்?

8. கரும்பலகையில் எழுதப்பட்டிருப்பது என்ன?

## பயிற்சி

1. இக் கேள்விகட்குப் பதில் எழுதுக :—

(1) உங்கள் பள்ளியில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன?

(2) உங்கள் வகுப்பில் எத்தனை மாணவர் இருக்கின்றனர்?

(3) அவர்களில் பெண்கள் எத்தனை பேர்? ஆண்கள் எத்தனை பேர்?

(4) உங்கள் ஆசிரியர் பெயர் யாது?

(5) உங்கள் பள்ளியில் எத்தனை ஆசிரியர் இருக்கின்றனர்?

* 2. உங்கள் பள்ளிக்கூடத்தைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.

* 3. உங்கள் பள்ளிக்கூட விளையாட்டுகளைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.

* 4. மேஜையின் உபயோகம் பற்றி நீ அறிந்ததைக் கூறு.

---

*குறிப்பு :—பிள்ளைகளை இவ்வாறு சொல்லப் பழக்குதல் நல்ல பயிற்சி ஆகும்.



# 23. பள்ளிக்கூடத் தோட்டம்

**புதிய சொற்கள்** :—கரீம்—தெரியும்—இருநூறு—கட்டி—பூண்டு—பொறுக்கி—எறி — கொத்து — சமப்படுத்தி—விதை—இறைப்பர்—வாய்க்கால் — பாய்ச்சு—சேர.

**தாமஸ்** :—கரீம், இதுதான் உங்கள் பள்ளிக்கூடத் தோட்டமா ? இது பெரியதாக இருக்கிறதே !

**கரீம்**:—ஆம். இதுதான் எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம். இது பெரிய தோட்டமே. காரணம் என்னதெரியுமா? எங்கள் பள்ளியில் இருநூறு பேர் படிக்கின்றனர். அவர்கள் எல்லோரும் தோட்டவேலை செய்ய வேண்டும்.

அதனால்தான் இந்தத் தோட்டம் பெரியதாக இருக்கிறது.

**தாமஸ் :**—எல்லாப் பிள்ளைகளுமா வேலை செய்கிறார்கள்? கரீம், அவர்கள் என்ன என்ன செய்கிறார்கள்?

**கரீம் :**—சிறிய வகுப்புப் பிள்ளைகள் தோட்டத்தில் உள்ள மண்கட்டி, புல், பூண்டு இவற்றைப் பொறுக்கி எறிவார்கள். பெரிய பிள்ளைகள் நிலத்தைக் கொத்துவார்கள்; மண்கட்டிகளை உடைப்பார்கள்; மண்ணைச் சமப்படுத்திப் பாத்திகள் கட்டுவார்கள்; வாய்க்கால்களை அமைப்பார்கள்; வாய்க்கால்கள் வழியே நீரைப் பாய்ச்சுவார்கள்.

**தாமஸ்:**—உங்கள் ஆசிரியர்களும் தோட்ட வேலைகள் செய்வார்களா?

**கரீம் :**—ஆம். அவர்கள் எங்களுடன் இருந்து வேலை செய்வார்கள்; எங்கள் வேலைகளைக் கவனிப்பார்கள்; வேண்டும் உதவி செய்வார்கள்.

**தாமஸ் :**—கரீம், உங்கள் தோட்டம் நன்றாக இருக்கிறது. எனக்குத் தோட்ட வேலையில் விருப்பம் அதிகம். நான் அதற்காகவே உங்கள் பள்ளியில் சேர விரும்புகிறேன்.

## கேள்விகள்

1. தோட்டத்தில் பிள்ளைகள் என்ன வேலைகளைச் செய்வார்கள்?

2. ஆசிரியர்கள் என்ன வேலைகள் செய்வார்கள்?

3. தோட்ட வேலைக்கு உபயோகப்படும் சாமான்கள் எவை?

## பயிற்சி

1. இக் கேள்விகளுக்குப் பதில் கூறு:—

(1) உன் பள்ளிக்கூடத்தில் தோட்டம் உண்டா? நீ அதில் என்ன வேலை செய்கிறாய்?

(2) அத் தோட்டத்தில் உள்ள மரங்கள் எவை? செடிகள் எவை? பூக்கள் எவை?

(3) கூடை, மண்குடம், செப்புத் தவலை— இவற்றைச் செய்பவர் யார்? இவை எங்கே கிடைக்கும்?

(4) பொறுக்கி, பாய்ச்சு, வாய்க்கால்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் பேசு.

(5) தாம்புக்கயிறு, மண்வெட்டி, மண்குடம்- இவற்றின் உபயோகங்களைச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துச் சொல்:—

(1) பெரிய——நிலத்தைக்——.
(2) ஆசிரியர் எங்கள்——க் கவனிப்பார்.
(3) தாம்புக்கயிறு நீர்——உதவும்.
(4) மண்வெட்டி——தைக்——உதவும்.

3. உன் வீட்டுத் தோட்டம் பற்றிச் சில வாக்கியங்கள் சொல்.



## 24. காக்கையின் தந்திரம்

**புதிய சொற்கள்** :—தந்திரம்—முத்தம்மாள்—பலகாரம் — வெளியே — போகிறார்கள் — காவல் — தூக்கி — நினைத்தது — துரத்தினான் — வேறு — அழைத்து — பக்கத்துக்கு — ஒன்றாக — இருந்து கொண்டன — அருகில் — துரத்திக்கொண்டு — மற்றொரு — தெரியுமா — இரண்டாம்.

இது முத்தம்மாள் பலகாரக் கடை. அவள் வெளியே போயிருக்கிறாள். முருகன் சிறிய பையன். அவன் காவல் இருக்கிறான்.

இங்கே ஒரு காகம் வந்தது. அது பல காரம் தூக்கிப் போக நினைத்தது. முருகன் அதை ஓடித் துரத்தினன்.

அது வேறு ஒரு காக்கையை அழைத்து வந்தது. பக்கத்துக்கு ஒன்ருக அவை இருந்து கொண்டன.

முதல் காக்கை முருகன் அருகில் வந்தது. அவன் அதைத் துரத்திக் கொண்டு ஓடினன். அப்பொழுது மற்ருெரு காக்கை என்ன செய்தது தெரியுமா? அது பலகாரத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டது.

பிறகு முருகன் இரண்டாம் காக்கையை துரத்திக் கொண்டு ஓடினன். அச்சமயம் முதல் காக்கை ஒரு பலகாரத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டது.

**கேள்விகள்**

1. பலகாரக் கடை என்பது என்ன?
2. முத்தம்மாள் யார்?
3. முருகன் யார்? அவன் ஏன் காவல் இருந்தான்?
4. முதல் காக்கை வேறு ஒரு காக்கையை ஏன் அழைத்து வந்தது?
5. காக்கைகள் எப்படி முருகனை ஏமாற்றின?
6. முருகன் என்ன செய்திருக்கக் கூடாது?

## பயிற்சி

1. இக்கதையை ஒழுங்காகச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) முருகன்——பையன். (பெரிய, சிறிய)

(2) காக்கை—— (ரோஷமுள்ளது, தந்திர முள்ளது, அன்புள்ளது)

(3) முத்தம்மாள் கடையில்—— (இருந்தாள், இல்லை)

3. வேறு ஒரு / மற்றொரு } ஒரே அர்த்தம் தரும் இரண்டு சொற்கள்.

தெரியும் × தெரியாது
இங்கே × அங்கே
அவை × இவை

} இவை எதிர்ப்பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

# 25. நெற்பானையும் எலியும்

1. பாட்டியின் வீட்டுப்
பழம்பானை—அந்தப்
பானையும் ஒருபுறம்
ஓட்டையடா!
ஓட்டை வழியொரு
சுண்டெலியும்-அதன்
உள்ளே புகுந்து நெல்
தின்றதடா!



2. உள்ளே புகுந்து நெல் தின்று தின்று-வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா!
மெல்ல வெளியில் வருவதற்கும்-ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா!



3. பானையைக் காலையில்
திறந்தவுடன்-அந்தப்
பாட்டியின் பக்கமாய்
வந்த வொரு
பூனை எலியைக்
கண்டதடா—ஓடிப்
போயதைக் கெளவியே
சென்றதடா.

4. கள்ள வழியினிற் செல்பவரை-எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ள படியே நடப்பவர்க்குத்-தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா.

தேசிக விநாயகம் பிள்ளை.



## 26. கடிகாரம்

**புதிய சொற்கள்** : - கடிகாரம் - பார்க்க உதவும் - முன்பக்கம் - கண்ணாடி - வட்டமானது - எண்கள் - முள்ளுகள் - நிமிஷம் - காட்டும் - சுற்று - நகரும் - **சாவி** - இல்லாவிட்டால் - நின்றுவிடும் - அலாரம் - மாட்டும் - கட்டிக்கொள் - மிகவும் - அறுபது - கொண்டது.

கடிகாரம் மணி பார்க்க உதவும். இதன் முன்பக்கம் கண்ணாடி இருக்கிறது. அது வட்டமானது. இதில் பன்னிரண்டு எண்கள் இருக்கின்றன. இரண்டு முள்ளுகள் இருக்கின்றன. பெரிய முள் நிமிஷம் காட்டும். சிறிய முள் மணி காட்டும். பெரிய முள் ஒரு

சுற்றுவர ஒரு மணியாகும். அது ஒரு சுற்று வந்தால் சிறிய முள் ஓர் எண்ணில் இருந்து மற்றோர் எண்ணுக்கு நகரும்.

சாவி கொடுத்தால் தான் கடிகாரம் ஓடும். இல்லாவிட்டால் நின்று விடும்.

சில கடிகாரங்கள் மணி அடிக்கும். சில அலாரம் அடிக்கும். சுவரில் மாட்டும் கடிகாரம் பெரியது. கையில் கட்டிக் கொள்ளும் கடிகாரம் மிகவும் சிறியது.

அறுபது நிமிஷம் கொண்டது ஒரு மணி. இருபத்து நான்கு மணி ஒரு நாள்.

### கேள்விகள்

1. கடிகாரத்தில் என்ன என்ன இருக்கின்றன?
2. சிறிய முள் எதனைக் காட்டும்?
3. பெரிய முள் எதனைக் காட்டும்?
4. ஒரு மணியை எப்படிக் கணக்கிடுவது?
5. ஒரு மணிக்கு எத்தனை நிமிஷம்?
6. எத்தனை மணி ஒரு நாள்?
7. கடிகாரங்களில் எத்தனை வகை உண்டு?
8. கடிகாரம் எப்பொழுது நின்றுவிடும்?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) சிறிய முள்———காட்டும்.
(2) ———முள் நிமிஷம்———.
(3) கடிகாரம் மணி பார்க்க———
(4) அறுபது———கொண்டது ஒரு மணி.

2. பெரியது, ஓடும், நகரும், காட்டும்—இவற்றுக்கு எதிர்ப்பதங்களைச் சொல்.

3. **கண்ணாடி இருக்கிறது** } இவற்றை நினைவிற்
**கண்ணாடிகள் இருக்கின்றன** } கொண்டு கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) முள் இருக்கிறது.
முள்ளுகள்———.

(2) இது கடிகாரம்.
இவை———.

4. நீ எத்தனை வகைக் கடிகாரங்களைப் பார்த்திருக்கிறாய்? அவற்றின் பெயர்களைக் கூறு.

# 27. தீபாவளி

**புதிய சொற்கள்** :—என்றால்...கொண்டாட்டம்—வகை—இவைகள்—பட்டாஸ் — மத்தாபு — சிவப்பு — எல்லாம் — பார்த்து — விடியற்காலம் — பிறகு — உடுத்து — இருக்கலாம் — ஜாக்கிரதை —படாமல் — எண்ணெய் — பக்ஷணங்கள் — புதுத் துணி.

தீபாவளி என்றால் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம். அவர்கள் பட்டாஸ், மத்தாபு வாங்குவார்கள்.

மத்தாபில் பலவகை உண்டு. சிவப்பு மத்தாபு, பச்சை மத்தாபு, பூ மத்தாபு இவைகளை எல்லாம் நீங்கள் பார்த்திருக்கலாம்.

தீபாவளி அன்று விடியற்காலத்தில் பலர் எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள் ; பிறகு புதிய ஆடைகளை உடுத்துக்கொள்ளுவார்கள்; அதன் பிறகு பக்ஷணங்களைச் சாப்பிடுவார்கள். பிள்ளைகள் பட்டாஸ் சுடுவார்கள்.

பட்டாஸ் சுடுபவர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். புதுத் துணிகளின் மேல் நெருப்புப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தீபாவளி ஐப்பசி மாதம் வரும்.


1
2

## கேள்விகள்

1. திபாவளி என்ருல் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம்—ஏன்?

2. பலவகை மத்தாபுகள் எவை?

3. தீபாவளி அன்று நம்மவர் என்ன செய்வார்கள்?

4. பட்டாஸ் சுடுபவர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்—ஏன்?

5. தீபாவளி எந்த மாதம் வரும்?

## பயிற்சி

1. கொண்டாட்டம், விடியற்காலம், ஜக்கிரதை, எண்ணெய் இவற்றை உபயோகித்துப் பேசு.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) மத்தாபில்———உண்டு.
(2) தீபாவளி———மாதம்———
(3) பிள்ளைகள்———சுடுவார்கள்.
(4) புதிய———உடுத்துக் கொள்வார்கள்.

3. உங்கள் விட்டில் தீபாவளியன்று என்ன செய்தீர்கள்?

4. பதிலை எழுதுக:—

(1) முதற் படத்தில் என்ன பார்க்கிருய்?
(2) இரண்டாம் படத்தில் நீ என்ன பார்க்கிருய்?
(3) மூன்ரும் படத்தில் என்ன பார்க்கிருய்?
(4) நான்காம் படத்தில் என்ன பார்க்கிருய்?

## 28. ஒழுக்கமுள்ள பிள்ளைகள்

**புதிய சொற்கள்** :—எதிர்ப்பக்கம் — சிறுவன் — சிறுமி — ஒழுக்கமுள்ள — தினமும் — சுத்தமான — அதிகாலை — எவ்வளவு — எழுத்துவேலை—ஊக்கமாக ...ஒழுங்காய்—கவனம் — செலுத்த — ஒருபோதும்— சண்டை—பாராட்டுவார்கள்.

எதிர்ப் பக்கத்துப் படத்தைப் பாருங்கள். அதில் ஒரு சிறுவனும் சிறுமியும் இருக்கிறார்கள். இவர்கள் தினமும் அதிகாலையில் எழுந்திருப்பார்கள்; அழுக்குப் போகக் குளிப்பார்கள்; தலையை வாரிக் கொள்வார்கள்; சுத்தமான உடைகளை உடுப்பார்கள்.

இவர்கள் தகப்பனார் இவர்களுக்கு எழுத்து வேலை கொடுத்திருக்கிறார். பிள்ளைகள் எவ்வளவு ஊக்கமாக எழுதுகிறார்கள், பாருங்கள். எழுதும்போது வேறு இடத்தில் கவனம செலுத்தவில்லை. இவர்கள் ஒரு போதும் சண்டையிட மாட்டார்கள். இவர்கள் ஒழுக்கமுள்ள பிள்ளைகள்.

நீங்களும் இவர்களைப் போல் ஒழுங்காய் இருக்க வேண்டும். செய்யும் வேலையை ஒழுங்காய்ச் செய்ய வேண்டும். அப்பொழுது எல்லோரும் உங்களைப் பாராட்டுவார்கள்.



## கேள்விகள்

1. சிறுவனும் சிறுமியும் எப்பொழுது எழுந்திருப்பார்கள் ?

2. அவர்கள் எழுந்து என்ன என்ன செய்வார்கள் ?

3. தகப்பனூர் அவர்களுக்கு என்ன கொடுத்திருக்கிறூர் ?

4. அவர்கள் அதை எப்படிச் செய்கிறூர்கள் ?

5. நீங்கள் அவர்களைப் போல என்ன செய்ய வேண்டும் ?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) படத்தில்————இருக்கிறூர்கள்.
(2) அவர்கள்——காலையில்———.
(3) அவர்கள்——பிள்ளைகள்.
(4) அவர்கள்———உடைகளை———

2. எதிர்ப் பக்கம், தினமும், ஊக்கமாக, ஒழுக்கமுள்ள—இவற்றை உபயோகித்துப் பேசு.

3. நீ என்ன என்ன எழுத்து வேலைகளைச் செய்கிறூய் ?

4. உன் தகப்பனூர் உனக்கு என்ன வேலைகளைக் கொடுக்கிறூர் ?

5. சுத்தம் × அசுத்தம்
எழுந்திரு × உட்கார்
ஊக்கம் × சோம்பல்
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உபயோகித்துப் பேசு.



## 29. காற்று

**புதிய சொற்கள்:**—சோலை — பெருங்காற்று — வீசுகிறது — காற்றில் — உதிர்கின்றன — ஒடிகின்றன — முறிகின்றன — நன்மை — காற்றாடி — ஆகாயம்—பறக்க — ஈரமான — காய — கடல் — படகு—தள்ளு — வானத்தில்—மேகம் — உடலுக்கு — நோய்.

இந்தச் சோலையில் மரங்கள் ஏன் சாய்கின்றன? இங்கே பெருங்காற்று வீசுகிறது. காற்றில் இலைகள் உதிர்கின்றன; கிளைகள்

ஓடிகின்றன. மரங்கள் முறிகின்றன. காற்றின் வேலையைப் பார்த்தீர்களா?

காற்றினல் நமக்குப் பல நன்மைகளும் உண்டு. அது நம் காற்றாடியைச் சுற்றும்; நம் பட்டங்களை ஆகாயத்தில் பறக்கச் செய்யும்; ஈரமான உடைகளைக் காய வைக்கும்.

கடலில் படகுகளைத் தள்ளுவது காற்றே, வானத்தில் மேகங்களைத் தள்ளுவதும் அதுவே.

சுத்தமான காற்று உடலுக்கு நல்லது. அழுக்குள்ள காற்று நோயைத் தரும்.

## கேள்விகள்

1. சோலை என்பது யாது?

2. பெருங்காற்றில் இலைகள்—கிளைகள்—மரங்கள் என்ன ஆகின்றன?

3. காற்றால் உண்டாகும் நன்மைகள் எவை?

4. எந்தக் காற்று உடலுக்கு நல்லது? எது கெட்டது?

## பயிற்சி

1. நீ பார்த்த ஒரு சோலையைப் பற்றிச் சில வாக்கியங்கள் சொல்.

| | சோலை | தோட்டம் | தோப்பு |
|---|---|---|---|
| 2. | தென்னஞ்சோலை | வாழைத்தோட்டம் | மாந்தோப்பு |
| | மாஞ்சோலை | பூந்தோட்டம் | பலாத்தோப்பு |
| | | | கொய்யாத்தோப்பு |

## காடு

ஆலங்காடு (ஆல மரக் காடு)
வேற்காடு (வேல மரக் காடு)
பனங்காடு (பனை மரக் காடு)

இவற்றை நினைவிற் கொண்டு கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) இது பலாத்——
(2) அது ஆலங்——
(3) இது தென்னஞ்———
(4) அது வாழைத்——


3. மரத்தின் பல பாகங்களின் பெயர்களைச் சொல்; பிறகு அவற்றை எழுது.

| | | |
|---|---|---|
| தள்ளு | படகு | மேகம் |
| காற்று | நோய் | காற்றுடி |

4. இச்சொற்களைக் கோடிட்ட இடங்களில் தக்கவாறு அமைத்துப் படி :—

(1) காற்றே கடலில்——தள்ளுவது.
(2) காற்று——சுற்றும்.
(3) நீ மூட்டையைக் கீழே——.
(4) வானத்தில்——இருக்கிறது.
(5) சுத்தமான——உடலுக்கு——.
(6) அழுக்குள்ள காற்று——தரும்.

## படப் பயிற்சி—7



# விடுகதைகள்

**புதிய சொற்கள்:**—அணைந்து — சடைச்சி — தொண்ணூறு — வட்டம் — ஆகாசம் — துஷ்டர் — பூமி—விழியன்—ஆழ—தூய—முட்டை—வீச.

**எதிர்ப் பக்கத்திலுள்ள படங்களிலிருந்து விடை கூறு :**

1. வண்ணான் வெளுக்காத வெள்ளை; குயவன் பண்ணாத பாண்டம்; மழை பெய்யாத தண்ணீர். அது என்ன?

2. நாலு காலுண்டு; வீச வாலில்லை. அது என்ன?


3. அப்பன் சொறியன்; ஆத்தாள் சடைச்சி; அண்ணன் விழியன்; நான் சர்க்கரைக் குட்டி. அது என்ன?

4. ஆழக் குழி வெட்டி, அதிலே ஒரு முட்டையிட்டு அணைந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை. அது என்ன?

5. வட்ட வட்டப்பாய். வாழ்வு தரும் பாய். அது துஷ்டர் திருடும் பாய். தூய வெள்ளிப்பாய் அது என்ன?

6. ஆகாசத்துக்கும் பூமிக்கும் ஒரே கம்பி. அது என்ன?

விடுகதை



## 30. ரயில் வண்டி

இந்த ரயில் வண்டி பாராய்; நீ
  எங்கேனும் ரயிலேறிப் போனாயோ? கூறாய்
எந்த வண்டி இதைப்போல—போகும்!
  எத்தனை தூர மானாலுங்கொண் டோடும்
நிலக்கரி தானிதன் தீனி;—நல்ல
  நீராவி யாலிது வேகமாய்ப் போகும்.
பலத்தை யுடைய பிராணி—ஒன்றும்
  பற்றி இழுப்பது இல்லை ஆச்சரியம்!
இஞ்சின் முன்னாலே இழுக்கும்;—வண்டி
  இரட்டைத் தண்டவாளத்தின் மேலேபோகும்
கொஞ்சமே னும்சலிப் பில்லை; மழை
  கோடை வெயில் காற்றால் கஷ்டமு மில்லை.

ச. கு. க.



## 31. மகாத்மா காந்தியார்

**புதிய சொற்கள் :**—*அருப்பாடு—ஏழ்மை—நிரம்ப-முன்னுக்குவர—இந்தியர்—சக்தி—நூற்றார் — விசேஷ—உருவம்—சாதாரண — பிரார்த்தனை—ராட்டினம்—எளிய—சுழற்றி—மகாத்மா—சத்தியம்.*

இதோ இந்தப் படத்தில் தெரிகிற உருவம் யாருடையது? இதுவே மகாத்மா காந்தியாரின் உருவம்.

மகாத்மா மிகச் சிறந்த இந்தியர். அவர் நிரம்பக் கல்வி கற்றவர்.

காந்தியாருக்கு நம்மிடம் அன்பு அதிகம். நமது ஏழ்மையைப் போக்க அவர் அரும்பாடு பட்டு வந்தார். அவர் தினந்தோறும் தம் கையாலேயே ராட்டினம் சுழற்றி நூல் நூற்றார்.

மக்கள் கள் குடிப்பது மகாத்மாவுக்குப் பிடிக்காது. ஒருவர் மற்றொருவரைத் தாழ நடத்துவதையும் அவர் வெறுத்தார். அவருக்குக் கடவுளிடத்தில் விசேஷ பக்தி இருந்தது. அவர் தினந்தோறும் கடவுள் பிரார்த்தனை செய்தார்.

நாம் முன்னுக்கு வரவேண்டுமென்று அவர் அரும்பாடு பட்டார். அவர் மிக எளிய உடையே உடுத்தார். அவருடைய உணவும் மிகச் சாதாரணமானதே. அவர் சத்தியம் தவறியதில்லை. மகாத்மா காந்தியாருக்குக் குழந்தைகளின்மேல் அன்பு அதிகம்.

### பயிற்சி

1. காந்தியார் சிறந்த தேசபக்தர். இன்னும் சில தேச பக்தர்களின் பெயர்களைக் கூறு:

2. நீ ராட்டினம் சுற்றுவதைப் பார்த்திருக்கிறாயா? அதைச் சுற்றுவது எப்படி?

3. சத்தியத்திற்குப் பெயர்போன அரிச்சந்திரன் கதை உனக்குத் தெரியுமா? சொல்.



# 32. பழக்கடை

**புதிய சொற்கள்** :—டஜன்—விலை—சேர்—எப்படி—சாத்துக்குடி — ஆரஞ்சு — மாதுளம் — பெருமா—அசல்—அடக்கம்—கிரயம்.

'இந்த ஆரஞ்சு விலை எப்படி?'
'டஜன் ஒரு ரூபாய், அம்மா?'
'அவ்வளவு விலையா, அப்பா?'
'அம்மா இது சாத்துக்குடி அல்லவா?'
'அப்படியானால் ஒரு டஜன் எடுத்துவை.'
'நல்லது, அம்மா.'
'இந்தத் திராக்ஷை என்ன விலை?'
'சேர் நான்கு அணா'
'இது புளிக்குமா?'

'பூஞ திராக்ஷை, இது புளிக்காது.'

'இரண்டு சேர் எடுத்து வை, அப்பா.'

'சரி, இந்த மாதுளம் பழம் பார்த்தீர்களா?'

'விலை எப்படி?'

'ஒன்று ஐந்தணா.'

'அவ்வளவு பெறுமா?'

'ஐந்தணா வந்தால் அசல் ஆயிற்று; ஒரு காசு கூட லாபம் இல்லை, அம்மா!'

'அப்படியானால் நீ நஷ்டத்திற்கு விற்க வேண்டா. நல்ல பழங்களாக மூன்று பழங்களை எடுத்துவை.'

'இவற்றை எல்லாம் ஒரு கூடையில் அடக்கம் செய்து தருகிறேன். அம்மா?'

'இந்தக் கூடையின் கிரயம் என்னவோ?'

'ஓர் அணா அம்மா!'

'நல்லது, மொத்தம் எவ்வளவு ஆகிறது?'

'இரண்டு ரூபாய் எட்டு அணா அம்மா!'

'இதோ பணத்தை வாங்கிக்கொள். நான் போய் வருகிறேன்.'

'நல்லது அம்மா!'

### கேள்விகள்

1. ஐந்து ரூபாய்க்கு வாங்கி ஏழு ரூபாய்க்கு விற்றால் லாபமா? நஷ்டமா?

2. நாம் வாங்கி வைத்த பால் கொட்டிப் போகிறது. நமக்கு லாபமா, நஷ்டமா?



# 33. குறத்தி கூறுதல்

**புதிய சொற்கள்:**—திருநாடு-கேட்கிறாய்-ஏமாற்றம் ... இந்திரன்—சந்திரர் ....தவம்— புரியும்—முனிவர்—ரிஷிகள்—கொச்சி...குடகு —குமரேசர் — வாழ்வது—பவழம்—பரமசிவன்—வங்காளம் - சிங்களம் - மகதம்—வளம்—குறி—உரைக்க—ராமக்காள்—லட்சுமக்காள்—பொம்மக்காள்—உண்மையாய்.

**என்றனது திருநாடு கேட்கிறாயோ? தம்பி!**
**ஏற்றமுள்ள இந்திரனார் ஆளுமெங்கள் நாடு ;**
**சந்திரர்கள் சூரியர்கள் தவம் புரியும் நாடு ;**
**தவமுனிவர் ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு ;**
**கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு ;**
**குமரேசர் வாழ்வதும் எங்களது நாடு ;**

**பச்சைமலை பவழமலை எங்களது நாடு ;**
**பரமசிவன் வாழ்வதும் எங்களது நாடு ;**
**வங்காளம் சிங்களம் மகதமெங்கள் நாடு ;**
**வளம்பாடிக் குறியுரைக்க வந்தேனடா தம்பி !**
**ராமக்காள் லட்சுமக்காள் பொம்மக்காள்**
**என் பேர் ;**
**உண்மையாய்க் குறியுரைப்பேன் உன்றனுக்**
**குத் தம்பி !**

**—அல்லியரசிமாலை**

### பயிற்சி

*1. படம் பார்த்துக் கேள்விகளுக்குப் பதில் சொல் :—*

*(1) படத்தில் உள்ள குறத்தி என்ன நகைகளை அணிந்திருக்கிறாள் ?*

*(2) அவள் என்ன உடுத்துக் கொண்டிருக்கிறாள் ?*

*(3) எதிரே இருக்கும் மனிதன் ஏன் கையை நீட்டி இருக்கிறான் ?*

*(4) குறத்தி எந்த எந்த மலைகளைத் தனக்குச் சொந்தம் என்று சொல்லுகிறாள் ?*

*(5) குறத்தி எந்தெந்த நாடுகளைத் தன் நாடுகள் என்று சொல்லுகிறாள் ?*

*(6) குறத்தியின் பெயர்கள் யாவை ?*

*2. நீ குறத்தியைப் பார்த்திருக்கிறாயா? நீ அறிந்த குறத்தியைப் பற்றிச் சில வாக்கியங்கள் சொல்.*

*3. நீ பார்த்த மலையைப் பற்றிச் சில வாக்கியங்கள் சொல்.*

*4. சூரியனைப் பற்றி நீ அறிந்ததைக் கூறு.*

*5. சந்திரனைப் பற்றி நீ அறிந்ததைக் கூறு.*

*6. அக்காள் × தங்கை*
*அண்ணன் × தம்பி*
*குறத்தி × குறவன்*
*} இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.*

# 34. உலக நீதி

ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டா.
ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டா.
குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டா.
கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டா.
வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத்
திரிய வேண்டா.
மூத்தோர்சொல் வார்த்தைதனை
மறுக்க வேண்டா.
காணாத வார்த்தையைக்கட்
டுரைக்க வேண்டா.
புண்படவே வார்த்தைகளைச்
சொல்ல வேண்டா.
சேராத இடந்தனிலே
சேர வேண்டா.
செய்த நன்றி ஒருநாளும்
மறக்க வேண்டா.
தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டா.

# 35. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி
   தெய்வம்.
2. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்
   தகும்.
3. தந்தைசொல் மிக்க மந்திரம்
   இல்லை.
4. தாயிற் சிறந்ததொரு கோயிலும்
   இல்லை.
5. திராக் கோபம் போராய் முடியும்.
6. நாடெங்கும் வாழக் கேடொன்றும்
   இல்லை.
7. நுண்ணிய கருமமும் எண்ணித்
   துணி.
8. மூத்தோர் சொல் வார்த்தை
   அமிர்தம்.

---

குறிப்பு :—முன்-முதலில், அறி-தெரிய வேண்டும், தீரா-தணியாத, நுண்ணிய-மிகச் சிறிய, கருமமும்-காரியத்தையும், எண்ணி-யோசித்து, துணி-தொடங்கு, மூத்தோர்-பெரியோர்.